பொழிவு - 6
குவிப்பு - 10
பக்கங்கள் - 12

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

விலை ரூபா 12.00
ஒக்ரோபர் 2003

THE ONLY TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


## வெள்ளி விழாக் காணும் திருத்தந்தை

## முத்திப்பேறு பட்டம் பெறும் அன்னை தெரேசா



ஆசாரத்திற்குரிய அன்னை தெரேசாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## மரியாள் - ஓர் புரட்சிப் பெண்!

ஒக்ரோபர் மாதம் மரியன்னையின் வணக்க மாதம். மரியன்னை பக்தி என்பது ஏதோ சில செபங்களிலும் விழாக் கொண்டாட்டங்களிலும் திருத்தலங்களைச் சந்திப்பதிலும் மட்டும் அடங்கவில்லை. மாறாக மரியன்னை பக்தி என்பது அன்னை மரியாளின் சவால்மிக்க செயற்பாடுகளை நமது வாழ்வாக்குவதில் அடங்கியுள்ளது. மரியாளுக்கு இன்று கத்தோலிக்க திருச்சபையில் உயர்ந்த இடம் – அதாவது இறைவனுக்கு அடுத்த படியாக அதேவேளை புனிதர்களுக்கு மேலான இடம் – கொடுக்கப்படுகின்றது. உலகின் பல்வேறு மரியன்னையின் திருத்தலங்களில் மக்கள் ஆயிரக்கணக்காக, இலட்சக்கணக்காக கூடிவருகின்றனர். இவ்வாறு மரியாளுக்கு நாம் உயர்ந்த இடம் கொடுத்து வணக்கம் செலுத்துவது அவர் யேசுவைப் பெற்று பேணி வளர்த்தார் என்பதற்காக மட்டுமல்ல; மாறாக இயேசுவுக்கு அவர் புரட்சிப்பால் ஊட்டினார் என்பதற்காக! தமது புரட்சிகரச் செயல்பாடுகளினால் நமக்கெல்லாம் முன்மாதிரி காட்டிச்சென்றார் என்பதற்காக!

### மரியாள் செய்த புரட்சி என்ன?

#### விசுவாசப் புரட்சி செய்தார்!

மரியாள் முதன் முதலாக விசுவாசப் புரட்சி செய்தார். மரியாள் 14 வயதுடைய கன்னிப்பெண். இன்னும் திருமணமாகாதவர். கன்னியாக இருக்கும்போதே பரிசுத்த ஆவியின் வல்லமையால் கருத்தரிக்க வேண்டும் என்பது கடவுளுடைய திட்டம். யூத சமுதாயத்தில் ஒரு கன்னிப்பெண் கர்ப்பம் தரிப்பது என்பது மிகவும் அவமானத்துக்குரிய ஒரு செயல். அதேவேளை அது கல்லாலெறிந்து கொல்லப்படுகின்ற மரண தண்டனைக்குரிய குற்றம். ஆகவே அவமானம், மரண தண்டனை ஆகிய இரண்டு பெரிய சவால்களைச் சந்தித்த நிலையில்தான் மரியாள் ஆண்டவரின் திட்டத்திற்கு ஆம் என்று தன்னை அர்ப்பணிக்கின்றார். இது அவர் ஆண்டவர்மேல் கொண்ட அசையாத விசுவாசத்தைக் காட்டுகின்றது. இதுதான் அவள் செய்த விசுவாசப்புரட்சி.

#### அன்புப் புரட்சி செய்தார்!

தன் உறவினரான எலிசபெத்து முதிர்ந்த வயதில் கருத்தரித்திருப்பதாக மரியாள் அறிய வருகின்றார். தானும் ஒரு கர்ப்பவதி என்பதைப் பொருட்படுத்தாமல் தான் வாழ்ந்த நசரேத்தூரில் இருந்து புறப்பட்டு எலிசபெத் வாழ்ந்த யூதா மலைநாட்டிற்கு விரைந்து செல்கின்றார். அங்கே மூன்று மாதம்வரை தங்கியிருந்து எலிசபெத்திற்கு உதவி புரிகின்றார். விவிலிய அறிஞர்களின் கணிப்பின்படி மரியாள் வாழ்ந்த நசரேத்தூரில் இருந்து எலிசபெத்து வாழ்ந்த யூதேயா மலைநாட்டிற்குமிடையில் 90 மைல் தூரமாகும். இத்தனை மைல் தூரத்தை நடந்து கடந்து உதவிசெய்யச் செல்லுகின்ற மரியாளுடைய உள்ளத்தில் பற்றியெரியும் பிறரன்புத் தீயைக் கண்டு நாம் வியக்கின்றோம்.

இங்கு இன்னுமொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். நம்முடைய ஊர் வழக்கப்படி முதியவர்கள்தான் இளம் பெண்களுக்கு பேறுகாலத்தின்போது உதவி செய்வார்கள். ஆனால் இங்கே 14 வயது நிரம்பிய இளம் பெண் மரியாள் முதிர்ந்த வயதில் உள்ள எலிசபேத்துக்கு பேறுகாலத்தில் உதவி செய்ய பயணிக்கின்றார். இங்கே அவர் ஓர் புரட்சிப் பெண்ணாக காட்சி தருகின்றார். இது தான் அவர் செய்த அன்புப்புரட்சி.

### சீடர் மன்றங்களே தேவை!

மரியாளுடைய உன்னத தெய்வீகத்தை மாட்சியைக் கண்டு வியந்து நிற்கின்ற, மக்களுக்கு அவர் பொழிந்து வருகின்ற மட்டற்ற அருள்மழையைக் கண்டு மகிழ்ந்து கைகொட்டுகின்ற *மரியாள் இரசிகர் மன்றங்கள்* அதிகமுண்டு. ஆனால் மரியாள் செய்த புரட்ச்சிகளை வாழ்வாக்கி அவருடைய புரட்சிப் பாதையில் வழிநடக்கும் *மரியாள் சீடர் மன்றங்கள* இல்லை. இன்று மரியாளுக்கு ரசிகர் மன்றங்கள் தேவையில்லை. சீடர் மன்றங்களே தேவை. விளக்கின் அடியில் இருட்டு இருப்பதுபோல் பக்தி உணர்ச்சி எனும் போர்வையில் பல மூடநம்பிக்கைகளும் குருட்டுப் பழக்கங்களும் இன்று மரியன்னை வணக்கத்தில் வந்து புகுந்துள்ளன. எனவே மரியன்னை வணக்கத்தில் உள்ள அர்த்தமற்ற ஆலாபரணங்களை விட்டுவிட்டு மரியன்னை நடந்து சென்ற புரட்சிப்பாதையில் பயணிப்போம். பலன்கொடுப்போம்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும் வரை

**அன்புடன் - அருட்பணியாளர் நேசன்**

பதிப்பாசிரியர்

# நெஞ்சில் மலரும் ஞாபகப் பூக்கள்

*அருட் சகோதரி றெஜினா அவர்களுக்கு*

## மல்லிகை மாலை

அனுப்பியவர்

*இலண்டனில் தற்போது வசிக்கும் மன்னா அபிமானி மதிப்பிற்குரிய மூத்த படைப்பாளி புலவர் மணி இளவாலை அமுது அவர்கள்*



அருட்சகோதரி றெஜினா



இளவாலை அமுது

அருட்சகோதரி றெஜினா அவர்கள் துறவறத்தின் வைரவிழாவைக் கண்டுகொண்டதாக மன்னா பத்திரிகையில் வாசித்து அறிந்தேன். மன்னாரின் முதலாவது பெண் துறவி அவர் என அறிந்தபோது மேலும் ஆனந்தமாயிற்று.

பூவின் வாசனையை வண்டுகள் அறிந்துகொள்ளும், மண்ணின் வாசனையை உழவன் அறிந்துகொள்வான். ஒரு துறவியின் வாசனையை அவருடைய தூய்மையான வாழ்விலும் பணியிலும் அறிந்துகொள்ளலாம்.

புகழ், பெருமை, பாராட்டு என்ற கோபுரங்களை எட்டிப்பார்த்தறியாத ஒரு தாழ்மையான துறவி அவர். பேச்சிலும் எழுத்திலும் விசுவாசத்தின் மண் ஒட்டியிருக்கும். சில நிமிடங்கள் உரையாடினாலும் வரண்ட வாழ்க்கையிலே சில ஈரமான நிமிடங்களைக் கண்டது போலிருக்கும். புல்லும் கசங்காத மெல்லிய நடையோடு பணிபுரியும் சகோதரி அவர். பணிவும் அன்பும் கொண்டவர். எக்காலத்திலும் பெலத்துப் பேசாத பெண் தெய்வம் அவர் என்று எனது பாரியார் குறிப்பிடுவதுண்டு.

*பேருக்கு வாழ்வது உயர்வான வாழ்க்கையல்ல ஊருக்கு வாழ்வதே உத்தம வாழ்க்கை* என்பதை நிலைநாட்டியவர். பாடப்புத்தகங்கள் சொல்லித்தராத பாடங்களைத் துன்பங்களும் தோல்விகளும் சொல்லித் தரும் என உணர்ந்தவர். அதிபராகவும் ஆசிரியராகவும் பணியாற்றிய இடங்களில் ஈ. எறும்புக்கும் தீமை செய்யாத துறவி என்ற மதிப்பைப் பெற்றவர்.

இந்த வயதிலும் சிட்டுக்குருவியைப்போல் பணி செய்வது ஆச்சரியமானது. ஆலயத்தின் தேவைகள், அகதிகளின் தேவைகள், தான் சார்ந்த கன்னியர் மடத்தின் தேவைகள் எவையென்றாலும் கருத்தூன்றிப் பணிபுரிகின்றார். சுருக்கமாக கூறப்போனால் இப்படியானவர்களால்தான் நாட்டுக்கு மழை பெய்கின்றது போலும். கன்னியர்மணி இன்னும் பல்லாண்டு வாழ்ந்து மக்களுக்குப்பணி செய்ய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்னைப் பின்செல்வாய் என்று சொன்ன
இயேசு பிரான் திருமொழியின் வழியே சென்று
மன்னாரில் முதற்பெண்ணாய்த் திருக் குடும்ப
மடத்தினிலே சேர்ந்தரிய துறவி யாகி
எந்நாளும் பிறர்பணியும் புனித வாழ்வும்
ஏற்ற பல செபதபங்கள் மாதா பக்தி
பொன்னாலே பூச்சொரியு மாறு வாழும்
புனிதவதி றெஜினா தாயே வாழி!

# கண்ணீருடன் கலந்த கவிதை அஞ்சலி

## எவறெஸ்ற் சிகரெமென எவறெஸ்ரா நீ வாழ்ந்தாய்!

அனுப்பியவர்

*மன்னா அபிமானியும் சிறுவர் இலக்கியப் படைப்பாளியும் மன்னார் அமுது என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்பவருமான திரு. அந்தோனிமுத்து ஆசிரியர் அவர்கள்*



அருட்சகோதரி எவறெஸ்ரா



மன்னார் அமுது

1. விண்ணும் மண்ணும் படைத்த விமலன் திருப்பதம் பணிந்து
எண்ணும் பொழுதெல்லாம் என்னிதயப் பேழையிலே
உண்மையுடன் உதிக்கும் உயர்வான எண்ணமதைக்
கண்ணீருடன் கலந்து கவிதைதனில் வடிக்கின்றேன்

2. நாரந்தனை அளித்த நல்லவளே: வல்லவளே: (புளிக்)
காரமதாய் நீ வாழ்ந்து விமலனுக்கு தொண்டு செய்தாய்
கோரயுத்த ஆழியிலே, கொடுமையெல்லாம் நீ சுமந்தாய்
வீரமுடன் வாழ்ந்து சமாதானம் வர நீ ஏன் பிரிந்தாய்?

3. நீங்காத அன்பு கொண்ட டொமினிக் எனும் தந்தையரும்
தங்கரத் தினம் என்னும் சிறந்த தாயவளும்
பாங்காக இணைந்து பெற்ற பண்பான புத்திரியே
ஏங்கி நிற்க எமைவிடுத்து, ஏற்றம் பெறச்செய்தனையோ?

4. நேர்கொண்ட பார்வை நிமிர்ந்த நடை உந்தனுக்கு
சீர்கொண்ட ஆசிரியப், பணிதனிலே நீ மகிழ்ந்தாய்
பார்புகழும் பண்புடனே பாங்காக வாழ்ந்தவளே
சோர்வுடன் நாம் தவிக்க, சோதரியே ஏன் பிரிந்தாய்

5. தலைவியாகத் திகழ்வதற்குத் தகுதியெலாம் நீ அடைந்தாய்
நிலையான கொள்கை நேர்மையுடன் பணிபுரிந்தாய்
கலைஞானம் எல்லாம் கற்றறிந்த வல்லவளே!
சிலையாக எம்மைத், தவிக்க விட்டு ஏன் பிரிந்தாய்!

6. சிரித்துச் சிரித்து எம்மைச் சிரிப்பாலே பிணைத்தவளே!
பரிவுடனே பாசமதைப், பண்பாகச் சொரிந்தவளே!
எரிக்கும் தீபோலத் தீமைகளைச் சிதைத்தவளே!
மரித்த உந்தன் செய்தி எங்கள் இதயமதை இறுக்குதம்மா!

7. அன்பாக சிஸ்ரர் என, நாவினிக்க நாம் அழைத்ததுவும்,
பண்பாக எம்முடன் நீ, பரிவாகப் பழகியதும்,
கண் இழந்து நிற்கும், கபோதிகளாய் நாம் தவிப்பதுவும்
எண்ணுகையில் எங்களது, இதயமெல்லாம் வெடிக்குதையோ!

8. அதியுயர்ந்த மலைச்சிகரம், எவறெஸ்ற் என நாமறிவோம்,
மதி படைத்த நீயும் ஒரு எவறெஸ்ற்தான் யார் மறுப்பார்?
கதியெல்லாம் நீ(யே) என்று கடவுள் பதம் பணிந்தவளே
விதி உன்னை எமைப்பிரித்து எடுத்தகதை பொறுக்கவில்லை!

### வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும்

பங்கு சுவாமியாரை உடனடியாக மாற்ற வேண்டும் என்ற மனுவோடு அந்தக் குழு ஆயரைக் காணச் சென்றிருந்தது.

"இவர் சுத்த மோசம். பாரபட்சம் காட்டுகிறார்" என்று பல குற்றச்சாட்டுக்கள். "விரைவில் இன்னுமொரு ஆளை நியமிக்க வேண்டும்" என்பது வேண்டுகோள்.

"இது போலதானே முன்னைய சுவாமியையும் குறைகூறி பெட்டிசன் கொடுத்தீர்கள். இந்த பெட்டிசன்கூட அதேமாதிரியாகத்தானே இருக்கு" என்றார் ஆயர்.

"இல்லை, ஆண்டவரே..... திகதி வித்தியாசமாக இருக்கிறதை கவனிக்கவில்லையா.....!" என்றார் தூதுக்குழுவில் ஒருவர்.




### புனிதர் பொன்மொழி

" கிறிஸ்து மனதை ஆளும்போது நாள் முழுதும் அமைதியில் ஆழ்கிறது."

- புனித கிளாறட் -

### புனிதர் பொன்மொழி

"இறப்பில் இறைவனைச் சந்திக்கும்போது நம் அன்பு தீர்ப்பிடப்படும்போது, எவ்வளவு செய்தோம் என்பதைவிட எவ்வளவு அன்புடன் செய்தோம் என்பதே முக்கியம்"

- அன்னை திரேசா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க ஆலயம் தகர்க்கப்பட்டதன் எதிரொலி!
# மன்னார் கத்தோலிக்க மக்கள் வீதியில் மறியல் போராட்டம்!

## பதற்ற நிலையைத் தணிக்க கடும் முயற்சி!

**கத்தோலிக்க மற்றும் இஸ்லாமியப் பிரதிநிதிகள் மன்னார் கச்சேரியில் கூடி நிலைமையை ஆராய்ந்தனர்! சமாதானமாக பிரச்சினையைத் தீர்க்க இரு தரப்பினரும் உடன்பட்டனர்!**

மன்னார் பள்ளிமுனை ஊசிமூக்கன்துறைப் பகுதியில் அமைந்திருந்த புனித அந்தோனியார் தேவாலயம் எருக்கலம்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்களினால் செப்ரம்பர் 28ம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு டைனமற் வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தையடுத்து பள்ளிமுனை மக்கள் தேவாலயம் உடைக்கப்பட்டதைக் கண்டித்தும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் மன்னார் அரச அதிபர் அலுவலகத்திற்கு முன்னால் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 29ம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இந்த வீதி மறியல் போரட்டத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான கத்தோலிக்க மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதனால் நகரில் பதட்டநிலை நிலவியது. ஆயிரக்கணக்கில் பொலிசாரும் இராணுவத்தினரும் நகரில் குவிக்கப்பட்டிருந்தனர். கத்தோலிக்க மற்றும் இஸ்லாமியத் தலைவர்களும் அரச இராணுவ அதிகாரிகளும் பதட்டநிலையைத் தணித்து சுமுகமாக பிரச்சினையைத் தீர்க்க கடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க.)

## பணி ஏற்பின் வெள்ளி விழா! முத்திப்பேறு பட்டமளிப்பு விழா





திருத்தந்தை பதவி ஏற்றதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்கள் ஒக்டோபர் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக் கிழமை வெகு சிறப்பாக கொண்டாடப் படவுள்ளது. அன்றைய தினம், அவரின் பணி வாழ்வின் 25வது ஆண்டு நிறைவும், அன்னை திரேசாவின் முத்திப்பேறு பெற்ற விழாவும், அன்றைய தினத்திற்குரிய மறை அறிவிப்பு ஞாயிறுதினக் கொண்டாட்டமும் இடம் பெற உள்ளது திருத்தந்தையின் வெள்ளி விழா நிகழ்ச்சிகள் வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில் நடைபெற உள்ளது. கிறிஸ்து பிறப்பின் 2000ம் ஆண்டு யூபிலி விழா கொண்டாட்டத்தின் பின்னர் நிகழும் மிகப்பெரிய உலகக் கத்தோலிக்க விழாக் கொண்டாட்டமாக திருத்தந்தையின் இவ்விழா அமைய உள்ளது.

## மன்னார் பேராலயப் பொன்விழா கோலாகலமாக நடந்தேறியது!

### – வைத்தியசாலைச் சந்தியில் இருந்து பவனி ஆரம்பம்!
### – ஒலிநாடாவும் நினைவு மலரும் வெளியிடப்பட்டன!

மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயப் பொன்விழா நிகழ்வுகள் கோலாகலமாக நடந்தேறியது. கடந்த 5,10.2003 அன்று இறுதி நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு மன்னார் வைத்தியசாலைச் சந்தியில் இருந்து மன்னார் ஆயர், குருக்கள், துறவியர், மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் பேண்ட் வாத்திய இசையுடன் பேராலயத்தை நோக்கி அழைத்துவரப்பட்டனர். பின்னர் 5.30 மணியளவில் பொன்விழாத் திருப்பலி மன்னார் ஆயர் தலைமையில் ஆரம்பமாகியது. மன்னார் குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார், யாழ் முன்னாள் குரு முதல்வர் மைக்கல்சாமி அடிகளார், செபமாலைத் தாசர் சபையின் மாகாண முதல்வர் ஸ்ரீபன் அடிகளார், அமதிகளின் யாழ் மாகாண ஆலோசகர் போல் நட்சத்திரம் அடிகளார் ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். விழாவின் இறுதியில் *நீயாக வா* என்ற ஒலிநாடா வெளியிடப்பட்டது. பொன்விழாவை ஒட்டிய சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. அடுத்த நாள் மாலையில் புனித செபஸ்ரியார் நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது.



பாண்ட் வாத்தியக்குழுவினர் பொன்விழாவுக்கு வருகை தந்திருந்த விருந்தினர்களை மன்னார் வைத்தியசாலைச் சந்தியில் இருந்து அழைத்து வருகின்றனர்.



மன்னார் ஆயர், பேராலயப் பங்குத் தந்தை எமில் அடிகளார், குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார் ஆகியோர் மாலையிட்டு அழைத்துவரப்படுகின்றனர்.

## டிலாசால் அருட்சகோதரர்களின் மேனிலை முதல்வர் இலங்கைக்கு விஜயம்

### 28ந் திகதி மன்னாருக்கு வருகை

டிலாசால் அருட்சகோதர்களின் உலகளாவிய மேனிலை முதல்வர் அருட்சகோதரர் அல்வாரோ றொட்றிகுவாஸ் எச்சவெறியா அவர்கள் இலங்கைக்கான 5 நாள் பயணத்தை மேற்கொண்டு இம்மாதம் (ஒக்டோபர்) 25ந் திகதி கொழும்பு வருகிறார். 30ந் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர் 28ந் திகதி காலை 7.00 மணிக்கு மன்னாருக்கு விஜயம் செய்கின்றார். 29ந் திகதி காலையில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியை பார்வையிடும் இவர் அதன்பின் மன்னார் ஆயர் அவர்களைச் சந்திப்பார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## நீயாக வா

*மன்னார் புனித செபஸ்ரியார் பேராலய பொன்விழா நினைவு ஒலிநாடா*

மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயப் பொன்விழா நினைவாக *நீயாக வா..* என்ற கிறிஸ்தவ பக்திப்பாடல்கள் அடங்கிய ஒலிநாடா ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. பத்துப் பாடல்கள் அடங்கிய இந்த ஒலிநாடாவில் அருட்பணியாளர் போல் ரொபின்சன், அருட்பணியாளர் திசை ஜெரி, டியூக் சேவியர், தேவராணி, கொலஸ்ரிக்கா, மேரி லீலி, ஆகியோர் பாடியுள்ளனர். பேராலய உதவிப் பங்குத்தந்தை, அருட்பணியாளர் ஜா. அடைக்கலராசா (ச.ச) அவர்கள் இவ் ஒலிநாடா வெளிவர ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டார். மன்னார் திருமறைப்பணி நிலையத்திலுள்ள வளனகத்தில் இவ்வொலி நாடாவைப் பெற்றுக்கொள்ளலாம்.





## க. பொ. த. கிறிஸ்தவ பாட வினா விடை நூல்
## விற்பனைக்கு உண்டு

அருட்சகோதரர் ஆர். ஜோசப் ஜெயக்காந்தன் அவர்களால் தொகுக்கப்பட்ட க.பொ.த. சாதாரண தரத்திற்குரிய 'கத்தோலிக்க திருமறை மாதிரி வினாக்களும் விடைகளும், கடந்த கால வினாக்களும் விடைகளும். 2001 - 2003' என்ற வினாவிடை நூல் வெளிவந்துள்ளது மன்னார் திருமறைப்பணி நிலையத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள *வளனகம்* விற்பனை நிலையத்தில் இந்நூலை பெற்றுக்கொள்ளலாம்.


### கிறிஸ்மஸ் சிறப்பிதழ் தொடர்பாக - எழுத்தாளர்கள் கவனத்திற்கு!

டிசம்பர் மாத மன்னா வழமைபோன்று கிறிஸ்மஸ் சிறப்பிதழாக வெளிவரும். ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் நவம்பர் 20ந் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக ஆக்கங்களை அனுப்ப வேண்டும். இத்திகதிக்குப் பின்பு எமக்குக் கிடைக்கும் ஆக்கங்கள் இவ்வருட கிறிஸ்மஸ் சிறப்பிதழில் இடம்பெறமாட்டாது என்பதைத் தெளிவாக சொல்லிவைக்கின்றோம். (பதிப்பாசிரியர்)

********



மடு வீதிச் சந்தியிலிருந்து மடு மாதா கோயிலுக்குச் செல்லும் 12 கிலோமீற்றர் வீதி கடந்த 25.09.2003 இல் திறந்து வைக்கப்பட்ட போது புனர் வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, பொலிஸ் அதிகாரிகளுடன் உரையாடுகிறார். வீதித் திறப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆகியோரும் கலந்துகொண்டனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

## செபமாலையின் மகிமையா? தொலைக்காட்சி நிகழ்ச்சியா?



றொபின்சன், நிரோஸ் இருவரும் இணைபிரியாத நண்பர்கள் அவர்கள் இருவரும் 8ம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்கள். 3ம் தவணைப் பரீட்சை எழுத ஆயத்தத்துடன் இருக்கிறார்கள். ஆனால் றொபின்சன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். நிரோஸ் பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்தவன். அவர்களின் பாடசாலை வகுப்பாசிரியர் மாணவர்களை பயிற்சிப் புத்தகங்கள் வாங்கும் படி கூறினார். அப்பொழுது வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் "சரி டீச்சர், நாளைக்கு வாங்கி வருகிறோம்" என்று ஒரே குரலாகச் சொன்னார்கள். அடுத்தநாள் டீச்சர், புத்தகம் வாங்காதவர்களை வாங்கியவர்களிடம் மாறி வாங்கிப் படிக்கும்படி கூறினார். அப்பொழுது றொபின்சன் மௌனமாக தலையைக் கவிழ்த்தபடி நின்றான். ஆசிரியர் மாணவர்களை பார்த்தபொழுது றொபின்சன் வாடிய முகத்தோடு நிற்பதைக் கண்டார். "நிரோஸ் புத்தகம் வாங்கினால் அதில் நானும் வாங்கிப் படிக்கலாம்" என்று றொபின்சன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அன்று நிரோஸ் புத்தகம் வாங்கினான். மாலை 6 மணி அளவில் றொபின்சன் நிரோசிடம் போய் "நிரோஸ் உன்னுடைய பயிற்சிப் புத்தகத்தை எனக்குக் கொஞ்சம் தா. உடனே எழுதி விட்டுத் தருகிறேன்" என்று கேட்டான். அந்த நேரத்தில் நிரோஸ் வீட்டார் அனைவரும் தொலைக்காட்சியின்முன் மண்டியிட்டு இருந்தனர். தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்ப்பதை றொபின்சன் குழப்பி விட்டான் என்பதை அறிந்த நிரோஸின் தாய் சீறி விழுந்து, "நிரோஸ் படிக்க வேண்டும் உனக்குத் தர முடியாது" என்று கோபத்தோடு கூறினாள். றொபின்சன் வேதனையோடு வீடு வந்தான். அன்று தன் வீட்டாரோடு அவன் குடும்ப செபமாலையை வேதனையோடு ஒப்புக்கொடுத்தான். அடுத்த நாள் விடியற்காலையில் அவனின் உள்ளம் பயத்தால் நடுக்கமுற்றது. ஏன்? வீட்டுப்பாடம் செய்யவில்லை! விடியற்காலை அருகிலுள்ள வீட்டு வானொலியில் கீதாஞ்சலி நிகழ்ச்சியில் கிறிஸ்தவ கீதம் ஒலித்தது. அதில், "கலங்காதே என் நெஞ்சமே, கர்த்தர் இயேசு அன்பு செய்யக் காலமெல்லாம் காத்திருக்கக் கலக்கம் ஏன் நெஞ்சமே" என்று ஒலித்தது. உடனே அவன் திகைத்துப் போய், "இறைவா, இறைவா எனக்கா இந்த வார்த்தை" என்று நினைத்து ஆறுதல் அடைந்தான்.

சில நாட்களின்பின் 3ம் தவணைப் பரீட்சை முடிந்தது. அப்பாடசாலையில் 8ம் ஆண்டு இறுதி மட்ட பரீட்சையில் அம் மாவட்டத்திலேயே றொபின்சன் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்திருக்கிறான் என ஆசிரியர் கூறினார். உடனே றொபின்சன் செபமாலை அன்னைக்கு நன்றி கூறினான். செபமாலையின் மகிமையா? தொலைக்காட்சியின் நிகழ்ச்சியா? சிந்தியுங்கள்!

*க. ஜெயரமணன், தரம் - 10, மன். ஆண்டாங்குளம் பாடசாலை.*

## சிறுவர் தொடர் கதை

## சிவந்த மணல்

அங்கம் 13

### புனித அருளானந்தர்



49. செங்கோல் நிமிர்ந்து நின்றால் நீதி, அதுவே சாய ஆரம்பித்தால்....! தன் அரண்மனையில் உள்ள பல உயர் அதிகாரிகளும்கூட மெய்மறையில் சேர்ந்துவிட்டதால், தன் அரியணைக்கு ஆபத்து வந்துவிட்டதுபோல் உணர்ந்தான் சேதுபதி மன்னன். மேலும் நம் புனிதருக்காக தடியத்தேவர் வாதிட்டதை ஏற்கனவே விரும்பாத சேதுபதி மன்னன், இக் கிறிஸ்தவக் கைதிகளைக் கொல்லவேண்டுமெனத் தனக்குள்ளே கூறிக்கொண்டான். இதைக்கேட்ட போர்ச் சேவகன் ஒருவன் வெளியே ஓடிவந்து, "கிறிஸ்தவக் கைதிகளைக் கொல்லும்படி அரசர் ஆணையிட்டுள்ளார்" எனக் கூறிக்கொண்டே சென்றான். இதைக்கேட்டு மகிழ்ச்சியுற்ற நம் புனிதர், தன் உடன் உழைப்பாளிகளும் வீரமரணத்திற்குத் தயாராக இருக்கும்படி தூண்டினார். தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தும்படி கூறி பாவமன்னிப்பு அருட்சாதனத்தை அளித்து அவர்களைத் தயார் செய்தார்.

50. நீதி, நேர்மையோடு ஆழ்வதும், குறிப்பாக ஏழை எளிய மக்களின் வாழ்வு வளம்பெறவும் நல்லாட்சி புரிவதன் அடையாளம்தான் செங்கோல். ஆனால் அதுவே கொடுங்கோலாக மாற ஆரம்பித்தால்...... ! சேதுபதி மன்னனின் ஆட்சியும் அக்கதிக்கு உள்ளாயிற்று. முதலில் நம் புனிதரை அழித்துவிட சேதுபதி மன்னன் முடிவு கட்டுகிறான். எனவே அல்லிக்குளம் பகுதியில் அவரைச் சுட்டுவிட ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவரைக் கொல்வதற்கு துப்பாக்கியைக் குறிவைத்த வேளையில் தடியத்தேவர் துப்பாக்கிமுன் வந்து "முதலில் என்னைச் சுட்டுவிட்டுப் பின் என் குருவைச் சுடுங்கள்" என்கிறார். இதை சற்றும் எதிர்பாராத சேதுபதி மன்னன் அசந்து விடுகிறான். மீண்டும் நம் புனிதரைச் சிறை வைக்க உத்தரவு இடுகிறான்.

51. நம் புனிதர் அருளானந்தரை வெளிப்படையாகக் கொன்றால் உள்நாட்டுக் கலகம் ஏற்படலாம் என எண்ணி, அவரை முதலில் நாடுகடத்துவதுபோல் திட்டம் தீட்டுகிறான். ஓரியூர் பகுதிக்கு அனுப்பி, ஓரியூர் பகுதியை ஆழும் உதயத்தேவனுக்கு இரகசிய ஓலையை அனுப்பி நம் புனிதரைக் கொன்றுவிட இரகசியத் திட்டம் தீட்டுகிறான் மன்னர் சேதுபதி. ஆனால் நம் புனிதர் இதை அறிந்திருந்தார். தனக்கு வேதசாட்சி முடிவு விரைவில் கிடைக்க உள்ளது என்று பேராவல் கொள்கிறார்.

52. கொலைக்களம் நோக்கி நம் புனிதர் பயணிக்கின்றார். 1693ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாள் இராமநாதபுரத்திலிருந்து சுமார் 40 கல் தொலைவிலுள்ள ஓரியூருக்கு, முதலில் சற்று தூரம் குதிரையிலும், பின் கால்நடையாகவும் இழுத்துச் செல்லப்படுகின்றார். உடலெல்லாம் வேதனை. 31ம் தேதி நம் புனிதரை உதயத்தேவன்முன் நிறுத்தினார்கள். மரண தண்டனை விதிக்கப்பட்ட ஓலை நம் புனிதருக்கு விரித்து வாசித்துக் காட்டப்பட்டது. ஆனால் அத்தண்டனை நிறைவேறாமல் இருக்கும் உரிமை தனக்கு உண்டெனவும், ஆனால் தனது நோயை நம் புனிதர் குணப்படுத்த வேண்டுமெனவும் உதயத்தேவன் கூறுகிறார். தான் வேண்டுவது விடுதலையல்ல, வீரமரணமே எனக் கூறுகிறார் நம் புனிதர். நம் புனிதர் மீண்டும் சிறையிலடைக்கப்படுகிறார்.

(தொடரும்)

## கவிதைப் பூக்கள்

### அகர வரிசையில் சிறுவர்கள்

அன்புச் சின்னப் பாலர்களாம்
ஆர்வமுடன் வாழ்ந்திடுவோம்
இன்பமுற்று இப்பூவுலகில்
ஈன்றார் பெருமை சாற்றிடுவோம்.
உண்மை பேசத் தெரிந்திடுவோம்
ஊக்கமாய்க் கல்வி கற்றிடுவோம்
என்றும் எம்மைக் காத்திடும்
ஏக பரனைப் போற்றிடுவோம்.
ஐயமுற்று வாழ்ந்திடுவோம்
ஒற்றுமையாய் இருந்திடுவோம்
ஓங்கும் நீதி கேட்டிடுவோம்.
ஔடதம் என்றும் காத்திடுவோம்
அ்ஃறிணையிலும் அன்பு கொள்வோம்.

*பீ. ஆன் ஜெனற் டிலக்ஷனா,*
*நறுவிலிக்குளம்.*

### வெண்புறாவே

வெண்புறாவே
உனக்கு வெட்கமில்லையா?
வெறிகொண்ட சமூகத்தில்
சமாதானம் என அலைவதற்கு....!
உனக்கே சுதந்திரமில்லை....!
பின் ஏன் நீ உலக மக்களை
சுகப்படுத்த நினைக்கின்றாய்...!

இங்கு அறிவுள்ள மானிடமே -
அதைப்பற்றி சிந்திக்கவில்லை
நீ மட்டும் ஏன் அதற்காக
அதிகம் சிறகடிக்கின்றாய்?

மானிட வாய்கள்
சமாதானம் சமாதானம்
என்று வாய் கிழியக் கத்தலாம்.
ஆனால் அவனின் இதயமோ
இனவெறிக்கு இரையாகிவிட்டது
அது உனக்கு எப்போது
புரியப்போகிறது......?

*யே. அன்ரனி (டிறோன்)*
*தரம் - 02*
*பொன்தீவுகண்டல், முருங்கன்.*

### இறைவன்

பார்க்கக் கண்களை தந்தவர் யார்?
கேட்கக் காதுகள் தந்தவர் யார்?
சுவைக்க நாவினைத் தந்தவர் யார்?
மணக்க மூக்கினைத் தந்தவர் யார்?
இருக்க வீட்டினைத் தந்தவர் யார்?

குறைகளை அகற்றிடச் சொன்னவர் யார்?
குவலயம் தளைத்திடச் செய்தவர் யார்?
நிரந்தர வாழ்வைத் தருபவர் யார்?
துன்பம் வந்தால் தீர்ப்பவர் யார்?

என்றும் எம்மைக் காப்பவர் யார்?
நன்றே செய் எனச் சொன்னவர் யார்?
உலகைப் படைத்துக் காப்பவர் யார்?
உயிர்களை வாழ வைப்பவர் யார்?
எல்லையில்லாப் பரம் பொருளாம்
அவரே இறைவன் என்றுணர்வோம்.

*பா. துஷ்யந்தி,*
*பாலைக்குளி,*

## கொஞ்சமாச் சிரிங்க?



### கணவன் மனைவி சண்டை

மனைவிக்கும் கணவனுக்கும் சண்டை! பேச்சே இல்லை. அடுத்த நாள் அவன் மறந்தும் மறக்காமலும் பேசிவிட்டான். அவள் பேசவே இல்லை. என்ன செய்வது? புது வழி கண்டு பிடித்தான் கணவன். மேசையைத் திறந்தான், அலுமாரியை திறந்து பார்த்தான், பாத்திரங்களைத் திறந்தான். பவுடர் பெட்டியைத் திறந்தான், பைகளைத் திறந்தான். ஈற்றில் நகைப்பெட்டியைத் திறந்தான்....! ஆத்திரம் அடைந்தாள் மனைவி. ஐயப்பாடு அவளை அரித்தது, "என்ன? என்ன தேடுகிறாய்?" கேட்டுவிட்டாள் அவள். கணவன் அமைதியாக, "உன் குரலைத் தேடுகிறேன்" என்றான்.

*கனீசியா தேவதாஸ், நெடுந்தீவு.*

---

கண்டக்டர்:- வண்டியில் புகைபிடிக்கக் கூடாது என்று எழுதியிருக்கிறது நீர் புகை பிடிக்கிறீரே?
பிரயாணி:- நான் புகையை எங்கே பிடிக்கிறேன்? அதை விட்டுக்கொண்டல்லவா இருக்கிறேன்.

---

ஆசிரியர்:- ஏன் யேசுவின் பெற்றோர் சிறுவன் இயேசுவை ஜெருசலேம் தேவாலயத்துக்கு கூட்டிச் சென்றனர்?
மாணவன்:- அவரை வீட்டில் விட்டுப்போக பாட்டி இல்லாததால் சார்.

---

ஒருவர்:- ஏன் அந்த சாமியார் ஒரே கத்திக்கிட்டே இருக்கார்?
மற்றவர்:- தெரியாதா...? அவர் கத்தீற்றல் சாமியார் ஆச்சே அதனாலதான்.

---

எமிலி:- பாட்டி, அடுத்தவீட்டு அன்னம்மாள் உங்களைப்பற்றி இழிவாகப் பேசுவதை காது கொடுத்து கேட்கவே முடியலே.
பாட்டி:- அப்படியா? நான் இப்பதான் கோயில்லே இருந்து பாவசங்கீர்த்தனம் செய்திட்டு வர்றேன். நாளைக்குக் காலையில் நற்கருணை வாங்கிட்டு வந்து, அவளை ஒரு கை பார்க்கிறேன் பொறுத்துக்கொள்.

*றொபேட்சினி நோபேட், குருநகர், யாழ்ப்பாணம்.*

---



நீதிபதி : கொலை நடந்ததை நீர் நேரில் பார்த்தாயா?
சாட்சி: ஆம
நீதிபதி : அப்போது மணி என்ன இருக்கும்?
சாட்சி: மூன்றரை மணி
நீதிபதி : கொலை செய்தவன் அந்த இடத்திற்கு வரும் போது மணி என்ன?
சாட்சி: மூன்றரை மணி.
நீதிபதி: அவனை ஊர்க்காரர்கள் விரட்டிப்பிடிக்கும்போது எத்தனை மணி?
சாட்சி: மூன்றரை மணி.
நீதிபதி: அங்கு பொலிஸ் வரும்போது மணி என்ன?
சாட்சி: மூன்றரை மணி.
நீதிபதி: அவனை பொலிஸ் கைது செய்யும்போது மணி?
சாட்சி: மூன்றரை மணி.
நீதிபதி: என்ன ஐயா எப்போது மணி கேட்டாலும் மூன்றரை மணி மூன்றரை மணி என்று சொல்கிறீரே என்ன அர்த்தம்?
சாட்சி: நான் கையில் கட்டியிருந்த வாட்ச் ஓடவில்லை என்று அர்த்தம்.

*நீலுஜா தேவதாஸ், பாசையூர்*

---

கண்டக்டர்: டிக்கெட், டிக்கெட்...
ஒரு பிரயாணி: (பக்கத்தில் உள்ளவரிடம்) பார்த்தீர்களா இந்தக் கண்டக்டருக்கு எவ்வளவு பேராசை என்று, கை நிறைய டிக்கெட்டுக்கள் வைத்துக்கொண்டு மேற்கொண்டும் நம்மிடம் டிக்கெற், டிக்கெற் என்று கேட்கிறாரே.

---

மிட்டாய்க் கடைக்காரர்: (புதிதாக வேலைக்குச் சேர்ந்த பையனிடம்) நடுநடுவே எதையும் எடுத்துத் தின்னக் கூடாது. நான் இரவு வீட்டுக்குப் போகும்போது உனக்குப் தீன்பண்டம் தந்தனுப்புவேன். கவனமாக இருக்க வேண்டும்.
பையன்: நான் முன்பு வேலை பார்த்த கடையில் விசாரித்துப் பாருங்கள், நான் எதையும் அங்கு எடுத்துத் திண்டதில்லை.
கடைக்காரன்: முன்பு எந்தக் கடையில் வேலை பார்த்தாய்?
பையன்: மன்னார் சுவாம்பிள்ளை இரும்புக்கடையில்...!

*மனோகரி யக்கோதாசன், பட்டிதோட்டம், மன்னார்.*

---

ஆசிரியர்: அடேய் பொடியா ஒட்ட கம் வாங்கிட்டுவா.
பையன்: இந்தாங்க சார் ஒட்டகம்....

---

அசிரியர் : (டேய் உன்னை இந்தப் பக்கம் பார்க்கூடாது ஓடு.)
பையன: நான் வாற நேரமெல்லாம் கண்ண மூடிக்கொள்ளுங்கசார்.

*டெ. பிரபு பெரேரா, 8ம் வட்டார்ம், பேசாலை.*

---

மகன்: அப்பா அப்பா நா ஒன்று கேட்டா தருவிங்களா?
அப்பா: கேளு மகனே, நீ கேட்டு எதை நான் மறுத்திருக்கிறேன்
மகன்: அப்பா நெட்டி சுட்டு தாங்க..
அப்பா: தோட்டா இல்லையேடா கண்ணா!

*பி. பெனில், தோட்டவெளி*

---

நபர்1: சார் சார் உங்க தலையைக் காட்டுங்க மரம் நடுவோம்.
நபர்2: என் மண்டையில மரம் நடவா....!
நபர்3: ஆமா சார்..... உங்க மனைவி சொன்னாங்க உங்க மண்டையில களிமண்தான் இருக்கு எண்டு....!

*எம். கே. அன்ரனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலயம் தகர்க்கப்பட்டது தொடர்பாக...

## பல்வேறு தரப்பினரும் கூடிப்பேசியதிலிருந்து......

மன்னார் மாவட்டத்தில் ஊசிமுக்கன் முனை என்னும் பகுதியில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று தகர்க்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் வழிபாட்டுத் தளங்கள் அழிந்துபோனதற்கும், சேதமடைந்தமைக்கும், வழிபாட்டுக்கு மக்கள் செல்ல முடியாமல் போனதற்கும் போர் காரணமாக இருந்தது. நேரடியாக இன்னொரு மதத்தைச் சேர்ந்தவர்கள் தேவாலயமொன்றைத் தகர்த்தது இதுதான் முதல் முறையாக நடைபெற்றுள்ளது. சிறு சிறு சம்பவங்கள் ஒருசில நடந்தபோதும் டைனமற் வைத்துத் தகர்ப்பு நடைபெற்றதென்றால் இதுவே முதற் தடவையாகும்.

இந்தச் செயல் தொடர்பாக எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த முஸ்லிம் பெரியவர்கள் மன்னிப்புக் கேட்டனர். ஆனால், டைனமற்றை வைத்த குழுவினர் இந்தத் தேவாலயம் புதிதாகக் கட்டப்படுவதனால் தகர்த்தோம் என்று கூறுகின்றனர்.

இதே நேரம், பள்ளிமுனை வாசிகள் எங்களுக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து ஊசிமுக்கன் முனை அந்தோனியாருக்கு வணக்கம் செலுத்திய பின்னரே தொழிலுக்குச் செல்கின்றோம். இங்கு சிறு கொட்டகையாக இருந்த அந்தோனியார் தேவாலயத்தைக் கட்டினோம்... நாங்கள் எந்தக் கோவிலையும் இடிக்கவில்லை, அல்லது கோவிலொன்றை இடித்துவிட்டு அதற்கு மேல் தேவாலயம் ஒன்றைக் கட்டவில்லை. நீண்ட காலமாக நாம் வழிபட்ட அந்தோனியார் தேவாலயத்தைக் கட்டினோம். இது எந்த வகையில் பிழையானது? என்று கேட்கின்றனர். இந்தக் கேள்வியுடன் மறியல் போராட்டமொன்றில் அவர்கள் ஈடுபட்டனர். மக்கள் கிளர்ச்சி ஒரு புறமிருக்க மன்னார் அரச அதிபர், மன்னார் ஆயர், வன்னி புனர்வாழ்வு அமைச்சுக்கு உதவும் அமைச்சர் நூர்தீன் மஷுர், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன், சிவசக்தி ஆனந்தன், விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டத் துணை அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி, படை, பொலிஸ் உயரதிகாரிகள், பள்ளிமுனையைச் சேர்ந்த ஐந்து பேர், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஐந்து பேர், பங்குத் தந்தையர் மூவர் எனப் பலர் கூடி மன்னார் அரச பணிமனையில் பேசினார்கள். இவர்கள் பேசிக்கொண்டவற்றை நோக்குவது அவசியமானது.

பள்ளிமுனையைச் சேர்ந்தவர்கள் கூறுகையில் எங்கள் மூதாதையர் காலம் தொடக்கம் இந்த அந்தோனியார் தேவாலயம் இங்கு இருந்தது. அந்தோனியாரை வழிபட்டுவிட்டுத்தான் தொழிலுக்குச் செல்வோம், ஓய்வெடுப்போம், மீனைப்பிடித்து அங்கேயே கருவாடு போடுவோம். அதனை எருக்கலம்பிட்டி முஸ்லிம் வியாபாரிகளே எம்மிடம் வாங்குவார்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் அந்நியோன்ய உறவு இருந்தது. இன்று தேவாலயத்தை குண்டு வைத்து தகர்த்துள்ளனர். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

### *1. சிறப்பாக முடிந்த விவிலியப் போட்டிகள்*

மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் ஒவ்வொரு வருடமும் மறைக்கல்வி மாணவர்களுக்கு நடாத்தப்படும் விவிலியப் போட்டிகள் இவ்வருடமும் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்கள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பேச்சு, பாட்டு, கட்டுரை, சித்திரம், கவிதை, ஆகிய போட்டிகள் நடாத்தப்பட்டன. முதலில் பங்கு மட்டத்தில் இப்போட்டிகள் நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் 2 பேர் தெரிவு செய்யப்பட்டு மறைக்கோட்ட ரீதிப்போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

20.9.2003 அன்று காலையில் மடு மறைக்கோட்டத்திலும் மாலையில் வவுனியா மறைக்கோட்டத்திலும் 21.09.2003 அன்று காலையில் மன்னார் மறைக்கோட்டத்திலும் மாலையில் முருங்கன் மறைக்கோட்டத்திலும் கோட்ட மட்டத்திலான போட்டிகள் இடம்பெற்றன. மறைக்கோட்ட ரீதியாக ஒவ்வொரு பிரிவிலும் 2 பேர் தெரிவு செய்யப்பட்டு இறுதிப்போட்டியான மறைமாவட்ட மட்டப்போட்டி 20. 09. 2003 அன்று மறைக்கல்வி நிலையத்தில் நடாத்ததப்பட்டது. இப்போட்டிகளின்போது எமக்கு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

### *2. மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றிய மாதாந்த நிர்வாக சபைக்கூட்டம்*

26.09.2003 (வெள்ளி) அன்று மேற்படி கூட்டம் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இதில் பல்வேறு பங்குகளில் இருந்தும் வருகை தந்திருந்த மறையாசிரியர் பிரதிநிதிகள் 38 பேர் பங்குபற்றினர். செபவழிபாட்டுடன் ஆரம்பமாகிய இக்கூட்டத்தில் விவிலியப் போட்டி, மறையாசிரியர் தேர்வு, மறையாசிரியர் தேர்வு ஆயத்த வகுப்புகள், மறைக்கல்வித் தேர்வு, மறைக்கல்வி வாரம், போன்றவை பற்றி கலந்துரையாடப்பட்டது.

### *3. மறைக்கல்வி வாரம் 5 - 12 .10. 2003*

மன்னார் மறைமாவட்ட பங்குகள் கடந்த 5ந் திகதி தொடக்கம் 12ந் திகதி வரை மறைக்கல்வி வாரத்தைக் கொண்டாடின. இதற்கு உதவியாக மறைக்கல்வி நிலையத்தினால் மறைக்கல்வி வாரத்தை மையப்படுத்தி தயாரிக்கப்பட்ட போஸ்டர்கள், வழிபாட்டு பிரதிகள், கொடிவாரத்திற்குரிய கொடிகள் ஆகியன அனுப்பிவைக்கப்பட்டன.

### *5. பங்குகளில் நடாத்தப்பட்ட முதல் நன்மை, உறுதிப்பூசுதல் பாசறைகள், படக்காட்சிகள்*

- வஞ்சியன் குளம்: 18.08.2003 அன்று வஞ்சியன்குளத்தில் உறுதிப்பூசுதல் பெறும் மாணவர்களுக்கான பாசறை இடம்பெற்றது. நிரந்தர மறையாசிரியர்களான திரு.மரிய செல்வம், திரு.சவிரி, திரு.செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோர் மறைக்கல்வி இயக்குனர் நேசன் அடிகளாரோடு வஞ்சியன்குளத்திற்கு சென்று ஒருநாள் பாசறையை நடத்தினர்.
- ஆட்காட்டிவெளி : 24.08.2003 அன்று ஆட்காட்டிவெளியில் முதல் நன்மை பெறும் பிள்ளைகளுக்கான பாசறை இடம்பெற்றது. அன்றைய தினம் முதல்நன்மை பெறும் பிள்ளைகளின் பெற்றோருக்கும் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. மறைக்கல்வி நிலையத்தில் பணிபுரியும் நிரந்தர மறையாசிரியர்களும், மறைக்கல்வி இயக்குனரும் இப்பாசறையையும் கருத்தரங்கையும் நெறிப்படுத்தினார்கள்.
- நெடுங்கண்டல்: 24.08.2003 அன்று மாலையில் நெடுங்கண்டலில் அடம்பன் பங்கிலுள்ள மறைக்கல்வி பிள்ளைகளுக்கு உரை வழங்கப்பட்டது. அன்றைய தினம் மறைக்கல்வி இயக்குனர் அடம்பன் பங்கின் மறையாசிரியர்களை சந்தித்தார்.
- பெரியமடு : 24.08.2003 அன்று நிரந்தர மறையாசிரியர் மரியசெல்வம் அவர்களும், இயக்குனரும் பெரிய மடுவுக்குச் சென்று திருவிழா ஆயத்த நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தனர்.
- உயிலங்குளம் : 22.09.2003 அன்று உறுதிப்பூசுதல் பெறும் பிள்ளைகளுக்கான பாசறை உயிலங்குளத்தில் நடாத்தப்பட்டது. இதை நிரந்தர மறையாசிரியர்கள் நடாத்தினார்கள்.
- அடம்பன்: 27. 09. 2003 அன்று நிரந்தர மறையாசிரியர்கள் திரு. சவிரி, திரு. மரியசெல்வம் ஆகியோர் அடம்பன் பங்கிற்கு சென்று அங்கு உறுதிப்பூசுதல் பெறும் பிள்ளைகளுக்கு பாசறையை நடாத்தினார்கள். இதில் பெற்றோருக்கும் உரை வழங்கப்பட்டது.

## ஆசிய இளைஞர்தின நிகழ்வில்
### மன்னார் மறை மாவட்டப் பிரதிநிதி பங்கேற்பு



2003ம் ஆண்டிற்கான ஆசிய கத்தோலிக்க இளைஞர் தினமானது 2003 ஆவணி மாதம் 9 - 16ம் திகதிவரை இந்தியாவிலுள்ள பெங்களூரில் நடைபெற்றது. இதில் 19 ஆசிய நாடுகளிலிருந்து 750 இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டார்கள். இலங்கையிலிருந்து 33 இளைஞர் யுவதிகளும் 4 குருக்களும் பங்கேற்றனர். மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய செயலாளர் பீ. யூடி வெலிசியா மிராண்டா (ராஜினி, வங்காலை) கலந்துகொண்டார். இந்த ஒன்றுகூடலின் முக்கிய நோக்கம் ஆசிய நாடுகளிலுள்ள இளைஞர்களிடையே புரிந்துணர்வையும் நட்புறவையும் ஏற்படுத்தி சமாதானத்தை நிலைநாட்டுவதே ஆகும். இந்நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக இந்தியக் கர்தினால்மார்களும் ஆயர்களும் நூற்றுக்கனக்கான குருக்களும் கன்னியர்களும் கலந்துகொண்டார்கள். ஆசிய நாடுகளின் கலாச்சார நிகழ்வுகளும் விளையாட்டுக்களும் கருத்தமர்வுகளும் நடைபெற்றன. இலங்கை சார்பாகவும் கலாச்சார நிகழ்வுகள் மேடை ஏற்றப்பட்டன. அந்த நிகழ்வுகள் பலரதும் பாராட்டைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பங்குத் தள சங்கதிகள்

மன்னார் சாவக்கட்டு அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திருவிழா கடந்த செப்ரம்பர் மாதம் 13ம் திகதி காலை 7.00 மணிக்கு நடைபெற்றது.

பெரிய குஞ்சுக்குளம் புனித அங்காமத்து ஆலயத்திருவிழா செப்ரம்பர் மாதம் 8ம் திகதி காலை 7.00 மணிக்கு இடம் பெற்றது.

சாளம்பன் புனித அடைக்களமாதா ஆலயத்திருவிழா செப்ரம்பர் மாதம் 8ம் திகதி இடம்பெற்றது. ஆட்காட்டிவெளிப் பங்குத் தந்தை பீற்றர் மனோகரன் அடிகளார் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

முள்ளிக்குளம் புனித பரலோக மாதா ஆலயத்திருவிழா செப்ரம்பர் மாதம் 26ம் திகதி காலை 7.30 மணிக்கு மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையில் இடம் பெற்றது. முத்தரிப்புத்துறை பங்குத் தந்தை மாக்கஸ் அடிகளார் விழாவுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

## மன்னார் மறைக்கல்வி நிலையம் நடாத்திய
# மறை மாவட்ட மட்டத்திலான விவிலியப் போட்டி முடிவுகள்

### பேச்சுப் போட்டி

குழு - 1
1ம் இடம் ம. மாறி மொயூரா - நானாட்டான்
2ம் இடம் செ. ஸ்ருபினி குரூஸ் - தாழ்வுபாடு
3ம் இடம் அ. அனித்தா - வவுனியா
4ம் இடம் செ. மேரி வித்தியா - மடு
5ம் இடம் கி. கிசோக் - வவுனியா

குழு - 2
1ம் இடம் பு. ஜெனுக்சா - செட்டிகுளம்
2ம் இடம் சூ. ஜோ.வோல்டி சொய்சா - பண்டிவிரிச்சான்
3ம் இடம் பி. மேரி டினோசினி - நானாட்டான்
4ம் இடம் பே. அன்ரோ திவ்வியா - உயிலங்குளம்
5ம் இடம் பி. மரியடினோசன் லெம்பேட் - வங்காலை

குழு - 3
1ம் இடம் ம. ஜெர்மெயின் - பேசாலை
2ம் இடம் வி. ஜெரமி யேசுராஜா - வவுனியா
3ம் இடம் பி. மேரி அன்ரனீற்றா - வஞ்சியங்குளம்
4ம் இடம் கி. மேரி.நொயலின் குரூஸ் - பண்டிவிரிச்சான்
5ம் இடம் செ. மேரியஸ் அலன்ரீனா - வஞ்சியன்குளம

குழு - 4
1ம் இடம் ம. அருட்செல்வி பறுனாந்து - பண்டிவிரிச்சான்
2ம் இடம் ஞா. பெனுஸ்ராமேரி - மன்னார்
3ம் இடம் சா. வைதேகி - தட்சனாமருதமடு
4ம் இடம் ம. ஆன் மதுசா - மன்னார்
5ம் இடம் சே. றொக்சி - கோமரசன்குளம்

### பாட்டுப் போட்டி

குழு - 1
1ம் இடம் தே. ஆ. கனிமொழி - வஞ்சியன்குளம்
2ம் இடம் அ. டிலக்சனா - மன்னார்
3ம் இடம் யெ. சுமித்தா - முருங்கன்
4ம் இடம் ப. திரேசியா குமுதினி - செட்டிகுளம்
5ம் இடம் ஜே. கமலியா - தாழ்வுபாடு

குழு - 2
1ம் இடம் பே. ஆன்மேரி - விடத்தல்தீவு
2ம் இடம் தே. தேன்மொழி - வஞ்சியன்குளம்
2ம் இடம் செ. றீற்றா றோச் - பள்ளிமுனை
4ம் இடம் எ. மேரி லோஜினி - தோட்டவெளி
4ம் இடம் ச. லிவிங்ரன் கன்சியுஸ் - தேவன்பிட்டி

குழு - 3
1ம் இடம் ய. ஜெயறொணிஸ் - தேவன்பிட்டி
2ம் இடம் ஜெ. றொசானி - மன்னார்
3ம் இடம் சி. லிற்வின் சத்தியா - வவுனியா
4ம் இடம் ம. மே. மெக்ரலின் - கோமரசன்குளம்
5ம் இடம் அ. மேரி அனோஜா - நானாட்டான்

குழு - 4
1ம் இடம் அ. கீர்த்தனா - மன்னார்
2ம் இடம் பி. சிறானி - தோட்டவெளி
3ம் இடம் பொ. அசம்ரா ராஜி - பண்டிவிரிச்சான்
4ம் இடம் ச. தம்மிகா - பம்பைமடு
5ம் இடம் [illegible]

## *மன்னார் – தரவன்கோட்டையில் புதிய ஆலயம்*



மன்னார் தரவன்கோட்டையில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத் திறப்பு விழா 24. 09. 2003 அன்று மாலை 5.00 மணிக்கு மன்னார் பேராலயப் பங்குத் தந்தை எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை இவ்வாலயத்தை திறந்துவைத்து திருவிழாத் திருப்பலி நிறைவேற்றினார். திருப்பலி முடிவில் விழாவுக்கு வருகை தந்திருந்த குருக்கள் துறவியருக்கும் மற்றும் விருந்தினருக்கும் இராப்போசனம் வழங்கப்பட்டது. பல ஆண்டுகளாக முறையான ஆலயம் இல்லாது அவதியுற்ற தரவன்கோட்டை மக்களுக்கு இப்புதிய ஆலயம் ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

**'மோட்ச பாதை' நூல் விற்பனைக்கு உண்டு!**
யாழ்ப்பாணம் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்ட மோட்சபாதை நூலை வளனகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒரு புத்தகத்தின் விலை 175 ரூபாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபமாலை செபிப்போம்....... செபமாலை செபிப்போம்....... செபமாலை செபிப்போம்....... செபமாலை செபிப்போம்.......

# குடும்பத்தை ஒன்றிணைக்கும் பலம்பொருந்திய ஆயுதம்



# செபமாலை



அருட்பணியாளர் லொசிங்ரன், அமதி
அமதியகம், 26A குட்செட் வீதி,
வவுனியா

ஒக்ரோபர் மாதம் செபமாலை மாதம். செபமாலையின் நடைமுறை நன்மைத்தனங்களை இந்தக் கட்டுரையாளர் ஆராய்கின்றார்.

கத்தோலிக்கர்களாகிய எம்மிடையே பாரம்பரியமாக செபமாலை சொல்லும் வழக்கம் உண்டு. 53 மணிகளைக்கொண்ட இந்த செபமாலை எம் வாழ்வுக்கு ஒரு முக்கியமான கேடயமாக உள்ளது. மண்ணகத்திலிருந்து நாம் விண்ணகம் சென்றடையத் தேவையான ஏணியாகச் செபமாலை அமைந்துள்ளது. நாம் இச்செபமாலையை நித்தமும் செபிக்க வேண்டும் என்பது தேவதாயின் புனித வேண்டுகோளாகும். தேவதாயார் தாம் காட்சி கொடுத்த இடங்களில் தாமே சேர்ந்து செபித்து இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இன்று இவ்வுலகில் எத்தனையோ விதமான நவீன விஞ்ஞான வளர்ச்சிகள் நம்மை வியக்க வைக்கின்றன. இவற்றின் மத்தியில் மனிதன் ஓய்வின்றி இயந்திரமாக இயங்கிக்கொண்டிருக்கின்றான். அல்லது இயங்கவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். எனவே மனிதனுக்கு மன அமைதியையும், ஓய்வையும், ஒற்றுமையுணர்வையும் கொடுப்பதாக செபமாலை அமைகின்றது. இன்னும் நாம் ஆன்மீகத்தில் வளர எமக்குப் பாலமாகவும் இச்செபமாலை இருக்கின்றது. குடும்பங்கள் ஒன்றிணைந்து செபிக்கவும், ஒரு மனத்தவராய் அன்புறவில் இணையவும் அன்பியக் குடும்பங்கள் எம்மத்தியில் உருவாகவும் இச்செபமாலை ஒரு உன்னத கருவியாக உள்ளது. அது மட்டுமன்று குழுக்களாக ஒன்றிணைந்து செபிக்கையில் சமூக ஒற்றுமை, அன்பியப் பிணைப்பு, ஆக்கப்பூர்வமான சிந்தனை, செயல்கள் உருவாக இச்செபமாலை ஒரு உந்துசக்தியாகக் காணப்படுகின்றது.

ஆனால் நடைமுறை வாழ்வில் குடும்ப செபமாலை பற்றி விசாரித்தால் "செபமாலையா....அது....மனைவியும், பிள்ளைகளும் சொல்வார்கள்" என்பார் தகப்பன். அதேபோல் "எனக்கு சமைக்கிற வேலை இருக்கு. பிள்ளைகள் சொல்லுகிறார்கள் இல்லை...." என்பார் தாய். பிள்ளைகளைக் கேட்டால் "எங்களுக்கு ரியூசன் எக்ஸ்ரா கிளாஸ் நேரமில்லை...." என பல சாட்டுப்போக்குகளைச் சொல்வார்கள். "மனைவியும் பிள்ளைகளும் சொல்வார்கள்" என்றால் தகப்பன் - குடும்பத்தலைவன் இல்லாத செபமாலையை எவ்வாறு குடும்ப செபமாலை என்பது? அதை "அப்பா இல்லாத குடும்ப செபமாலை" என்றுதான் சொல்ல முடியும். அம்மா "சமைக்கின்ற வேலை" என்று சொன்னால் அங்கே பிள்ளைகள் தனியாக சொல்லும்போது அது எப்படி குடும்ப செபமாலையாக முடியும்? அதுவும் "அம்மா இல்லாத குடும்ப செபமாலை" என்றுதான் சொல்ல முடியும். ஏதாவது அவசர வேலையின் நிமித்தம் ஓரிரு நாட்கள் பெற்றோர்கள் இல்லாமல் செபமாலை சொல்வது பறவாயில்லை. ஆனால் சதா அவர்கள் இல்லாதிருப்பது ரோக்கியமானதல்ல

அதேவேளை சில குடும்பங்களில் செபமாலை செபிப்பது என்பது வெறும் கடமைக்காக செய்யப்படும் காரியமாகக் கருதப்படுகின்றது. குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றி முடிக்க வேண்டிய வெறும் அர்த்தமற்ற செயற்பாடாக இது கருதப்படுகின்றது. இன்னும் சில குடும்பங்களில் ஒருவர் ஒருவரோடு முகம் கொடுத்து கதைக்க முடியாத மனநிலையில் உள்ளவர்கள் வெறுமனே செபமாலை சொல்ல வேண்டும் என்பதற்காக ஒன்று கூடுவார்கள். சில வேளைகளில் செபமாலை முடிந்தவுடன் எதுவித உறவுநிலைகளும் இன்றி, கதை பேச்சுக்கள் எதுவும் இன்றி எழுந்து போய்விடுவார்கள்.

எனவே இவ்வாறான மனநிலைகள் மாற்றப்படவேண்டும். அத்துடன், யாராவது குடும்பத்தில் இல்லாதிருந்தால் அல்லது அவசர வேலை காரணமாக வெளியே சென்றிருந்தால் தகப்பனுக்காகவோ, தாய்க்காகவோ அல்லது பிள்ளைகளுக்காகவோ காத்திருந்து வந்தபின் ஒன்றாக செபிக்க வேண்டும். அப்போதுதான் குடும்பச் செபமாலை அர்த்தம் பெறும். அத்தோடு குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் தாங்கள் வேண்டப்பட்டவர்கள் தாங்கள் மதிக்கப்படுகின்றோம் என்ற உயர்ந்த எண்ணத்தைப் பெறுவார்கள்.

"கூடிச் செபிக்கும் குடும்பம் கூடி வாழும்" என்பார்கள். ஆனால் எமக்கோ குடும்பமாகக் கூடிச் செபிக்க நேரமில்லை. படைத்த இறைவனுக்காக பதினைந்து நிமிடம் பரிசாகக் கொடுக்க முடியவில்லை. 24 மணி நேரம் நாம் ஒரே கூரையின்கீழ் ஒன்றாக சமைத்து, சாப்பிட்டு, தேனீர் குடித்து, கதைத்து முஸ்பாத்தி பண்ணி சந்தோசமாக இருக்கின்றோம். ஆனால் ஒன்றாக செபிக்க முடியாது என்று கூறுகின்றோம். *கூடிவாழும் குடும்பம் குலையாது* என்பார்கள். எனவே கூடிச் செபிக்கும்போது எம்மனங்களில் ஒற்றுமையை வளர்க்க முடியும். எமது குடும்பங்களில் ஆன்மீக உணர்வையும், குடும்பப் பற்றுணர்வையும் (Family Spirit) வளர்க்க முடியும்.

தற்போது அனேக குடும்ப செபமாலைகளில் வேதாகம வாசிப்புக்களையும் சேர்த்துக்கொள்கின்றனர். இது நல்ல விடயம். உற்சாகப்படுத்த வேண்டும், பாராட்ட வேண்டும். செபமாலையின் ஒவ்வொரு காரணிக்கத்தின் மறை நிகழ்வை அறிமுகம் செய்யும் போது அது சம்மந்தப்பட்ட வேதாகமப் பகுதிகளை வாசித்தல் அல்லது செபமாலையின் முன்போ அல்லது பின்போ அதனை நினைவுபடுத்தலானது செபமாலை ஒரு விக்கிரக ஆராதனை



இல்லை என்பதை செபமாலை பற்றிய தெளிவில்லாத பிரிவினைச் சகோதரங்களுக்கு உணர்த்துவதாக அமையும். திருச்செபமாலையைப் பலர் வேதாகமத்திற்குப் புறம்பான இரட்சணிய வரலாற்றுக்குட்படாத ஒன்றாகக் கருதுகின்றார்கள். இந்த வேதாகம உள்ளீர்ப்பானது குறிப்பாக 1980, 90களில் மிக அதிக எண்ணிக்கையில் பலுகிப் பெருகிய பிரிவுகளுக்குட்பட்டிருக்கும் பிரிவினைச் சபைகள் - அடிப்படைவாதக் குழுக்களுக்கு மிகவும் சரியான விளக்கத்தைக் கொடுப்பதாக உள்ளது. இச்செபமாலையுடன் வேதாகம வார்த்தைகளைச் சேர்க்கும்போது செபமாலை நேரம் 20 - 25 நிமிடங்களாக உயரலாம். ஆனால் இந்தச் சிறிய நாளிகைப் பொழுது எமது நாள் பொழுதின் ஒரு சிறு பங்குதானே என்பதை எண்ணாது அதுவே அதிக நேரம் என்று எரிச்சல்படுபவர்களும் எம்மில் உள்ளனர். இச்செபமாலையை செபிக்க நாம் ஒன்றுகூடும்பொழுது அதில் பல வகையான தியாகச் செயற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன. ஒரு நோக்குடன் ஒரே சிந்தனையில் ஒன்றிணைந்து செபிக்குபோது மற்றவர் வரும்வரை காத்திருந்து செபிக்கும்போது பல நல்ல பண்புகள் எம்மில் துளிர்விட வாய்ப்பு உண்டு. அதாவது ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளல், விட்டுக்கொடுத்தல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் பக்தி உணர்வுகள் போன்றன உருவாகின்றன. இவ்வாறான நற்பண்புகள் எம் குடும்பங்கள் மத்தியில் உருவாக இக்குடும்ப செபமாலை அடித்தளமிடுகிறது. எப்பொழுது இந்த நற்பண்புகள் எம் குடும்பத்தைவிட்டு விலகுகிறதோ அப்போது அமைதி குலைகிறது. எனவே சிறுவயதில் இருந்து பிள்ளைகள் இவற்றைக் கருத்தில்கொள்ளாவிட்டால் பிற்காலத்தில் "நான் பெரிது" "நீ சிறிது" என்று சகோதரங்கள் மத்தியில் உறவுப் பிரச்சினைகள் உருவாக வழிவகுக்கும். அகந்தை, மனிதரை மதிக்காமை, மனங்கள் ஒன்றிக்காத தன்மைகள் போன்றவை தோன்றி உறவுகளில் விரிசல்களைத் தோற்றுவிக்கும்.

எம்முன்னோர்கள்கூட ஒருமனப்பட்டு, ஒரே குடும்பமாக அன்புடன் நட்புறவாடி, கூடிச் செபித்து விசுவாசத்துடன் வாழ்ந்தார்கள். நாமும் ஏன் நட்புடன் உறவாடி ஒரே குடும்பமாய் குழுவாக செபித்து இறைவனுக்குகந்த விசுவாசத்தில் எம் வாழ்க்கைக் கட்டடத்தை எழுப்பி எம் வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றக்கூடாது. (தி.ப. 2: 42 - 47)

செபமாலை சொல்வதன் மூலம் எம்மனதில் அமைதி உண்டாகும். அத்துடன் உளவியல் ரீதியாகவும் இது ஒரு அர்த்தமுள்ள உறவுப்பிணைப்பின் உறைவிடமாக அமையும். நாம் குடும்ப செபமாலை சொல்லும்பொழுது எல்லோரும் ஒரேயடியாக கத்திக்குளறி கூச்சல் போட்டு செபிப்பதில்லை: மாறாக ஒருவர் ஒரு பகுதியைச் சொல்ல இன்னுமொருவர் மற்றவர்கள் பதிலிலிருந்து பங்குகொள்வது ஒரு ஆரோக்கிய உறவுக்கு அடிப்படையாக அமைகிறது. உதாரணமாக ஒருவர் "*பரலோகத்தில் இருக்கின்ற....*" என ஆரம்பித்து குறிப்பிட்ட இடத்தில் முடிக்க மற்றவர்கள் "எங்கள் அனுதின உணவை....." எனத் தொடர்ந்து பதில் கூறி செபிக்கின்றோம். இவ்வாறே *அருள் நிறைந்த மரியாயே* என்ற செபத்திலும் ஒருவருக்கு மற்றவர்கள் காது கொடுத்து அவரது நேரத்தை மதித்து அவருக்குரிய இடத்தைக் கொடுத்து பக்தியாக செபிக்கின்றோம். இதனடிப்படையில் ஒருவன் உளவியல் ரீதியாக குடும்ப உணர்வுகளுடன் பக்குவப்பட்டு, அதனை ஒரு பாலமாக கொண்டு வாழ்கின்றான். எனவே இந்த முயற்சியானது எமக்கு பிறரை மதிக்கும் பண்பு, செவிமடுக்கும் பண்பு, பிறரை ஏற்றுக்கொள்ளும் பண்பு, காத்திருக்கும [illegible] விட்டுக்கொடுத்து வாழும் பண்பு, என்பன தோன்றி சுதந்திரமான- ஆரோக்கியமான சமூகத்தில் செயலூக்கம் கொண்ட வாழ்க்கையில் முன்னேற வழிசமைத்துக் கொடுக்கின்றது.

இன்றைய பொதுவான முறைப்பாடு என்னவென்றால் "இந்தக்காலத்துப் பிள்ளைகள் ஓரிடத்தில் இருக்கின்றார்கள் இல்லை. பராக்குகள் அதிகம், சரியான துடியாட்டம், படிப்பில்கூட சரியான கவனம் இல்லை" என்பதாகும். இதற்குக் காரணம் என்னவென்று சரியாகச் சிந்தித்தால் செபமாலை இல்லாத வாழ்வு என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால் எம்மை ஒவ்வொரு நாளும் 15 - 20 நிமிடங்கள் ஓரிடத்தில் நிறுத்தி, மனதை ஒருமுகப்படுத்தி, மனதைக் கட்டுப்படுத்த இயலாது வாழ்ந்ததுதான் காரணம். இதனை நாம் செபமாலைத் தியானத்தினூடாக பெறக்கூடிய வாய்ப்பு உண்டு. இதனைத் தவறவிட்டால் மேற்சொன்ன முறைப்பாடுகள் உண்மையாகி பிள்ளைகளின் கல்வி வாழ்வில் மட்டுமல்ல எம் எல்லோரினது வாழ்விலும் ஒரு பெரும் வீழ்ச்சியைக் கொண்டுவரும். எனவே செபமாலையிலோ, திருப்பலியிலோ, வேறு நிகழ்வுகளிலோ, எமது சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி, புலன்களை கட்டுப்படுத்தி, பழகாவிட்டால் எமது அறிவோ, ஆன்மீகமோ, எமது வாழ்வுதான்கூட வளர வாய்ப்பில்லை.

"செபமாலை என்பது பழசுகளின் பல்லவி, பாரம்பரியமானது, வேலை இல்லாதவர்களின் வேலை" என்பது இந்நாட்களில் இச்செபத்தின்மீதுள்ள மக்களின் - சிறப்பாக இளம் சந்ததியினரின் கருத்தாகும். இதனால் இதன்மீதுள்ள கவனம், பக்தி, மரியாதை, நம்பிக்கை போன்றவை குறைந்து செல்வது கவலை அளிப்பதாக உள்ளது.

இதனால்தான் என்னவோ திருத்தந்தை அவர்கள் இச்செபமாலையின் வல்லமையை உறுதிப்படுத்த இதன் பயன்பாட்டை மக்கள் நிறைவாகப்பெற இதைப்பற்றிய கருத்துக்களை தமது மடல்களில் வெளிப்படையாகக் கூறியுள்ளார். அத்தோடு ஏற்கனவே இருந்த 15 மறை நிகழ்வுகளுடன் *ஒளியின் மறைநிகழ்ச்சிகள்* என்ற இன்னும் ஒன்றை அறிமுகப்படுத்தி உள்ளார். நற்செய்தியின் ஒளியில் இன்னும் ஆழ, அகலக் கால் ஊன்ற - சிந்திக்க அழைப்பு விடுத்துள்ளார். கிறிஸ்தவ வாழ்வில் இச்செபமாலைத் தியானம் கட்டி எழுப்பப்படவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி உள்ளார். இவ்வாண்டினை (2002 - 2003) செபமாலை ஆண்டாகவும் பிரகடனப்படுத்தியிருக்கின்றார்.

இதுவொரு அரிய சந்தர்ப்பம்! ஆன்மீகத் தேடலின் ஆரம்பம்! எனவே நாமும் இந்த வாய்ப்பினை எமக்கு பயன்தரும் விதத்தில் கைக்கொள்ள வேண்டும். குறிப்பாக எமது நாட்டில் ஏற்பட்ட போரினால் பல சிதைவுகள், பிளவுகள், நடத்தைக் கோளாறுகள், சமூகச் சீர்கேடுகள் விதைக்கப்பட்டுள்ளனவென்றால் நாம் இச்செபமாலைத் தியானத்தை சரியாக பயன்படுத்தாமையும் ஒரு காரணமாக உள்ளது. மேலும் விரக்தியினால், தோல்விகளினால், அவமானங்களினால் வாழ்வை இழக்க நேரிட்ட சம்பவங்களினால், கடவுளை மறந்த உள்ளங்கள், அன்னையின் அன்பினை தனிமனித அனுபவ ரீதியாக பெற்றுக்கொண்டவர்கள் மீண்டும் செபமாலைத் தியானத்தில் நுழைந்து பயன்பெற்றுள்ளனர். செபமாலைகளை கையில் ஏந்தியவர்களின் வாழ்வு மாற்றங்களை குடும்ப தரிசிப்புகளின்போது அறியக்கூடியதாக உள்ளது.

இறுதியாக அமெரிக்காவில் வாழ்ந்த பேராயர் புல்ரன் சீன் (fultan sheen) அவர்கள் கூறுவதைப்போன்று "இறைவனின் பிள்ளைகள் என்ற பாக்கியத்தை திருமுழுக்கின் மூலம் பெற்றபோது எம்மில் ஏற்படும் இறைத்தொடுகை எமக்கு களிப்பினை தரும் (களிகூர்ந்த காரணிக்க மறை உண்மை). அந்தக் களிப்பினை ஏற்று அனுபவிக்கும்போது அது ஒரு துன்பத்திற்கான சவாலை ஏற்பதற்கான அழைப்பினை விடுக்கின்றது. (தேவ துக்க காரணிக்க மறை உண்மை) அந்தத் துன்பங்களில் வெற்றிகொள்ளும்போது அது மகிமைப்படுகின்ற (மகிமைக்குரிய காரணிக்க மறை உண்மை) நிலைக்கு எம்மை இட்டுச் செல்கின்றது" இவரது இக்கருத்துக்களுடன் ஒளியின் மறை உண்மைகளை இணைத்துப்பார்க்கும்போது, நாம் மகிமைக்குரியவர்களாக மாறுகின்றோம்.

நாம் மேற்கூறிய 4 வகையான 20 மறை உண்மைகளை செபமாலையூடாகத் தியானிக்கும்போது ஒவ்வொரு வகையும் எம்மை ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு அழைத்துச் செல்கின்றது. நாம் உள்ளார்ந்த ஆன்மீகப் பயணத்தில் வளர்ந்து செல்ல உதவுகிறது. ஆகவே எமது இறைத் தந்தையின் இல்லம் நோக்கிய எமது விண்ணகப் பயணத்தில் இச்செபமாலைத் தியானமானது எம்மை வாழ்வின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு இட்டுச்செல்வதாக இருக்கின்றது. அதை நாமும் எமது தனிப்பட்ட குடும்ப, சமூக வாழ்வில் உரிய முறையில் தியானித்து கூடிச் செபித்து வளம் பெறுவோம். "திருச்செபமாலைதான் என் அபிமானச் செபம்" - இரண்டாம் அருள் சின்னப்பர்.

"என்னிடம் வருபவர்களை நான் வெறுங் கையாக அனுப்ப மாட்டேன்" - மரியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்திப்பேறு பட்டம் பெறும் அன்னை திரேசாவின் அடிச் சுவடுகள்...





10 வயதில் அன்னை திரேசா தன் அக்கா ஆஜேயுடன்..!



குடும்பத்தைப் பிரிவதற்கு சில நாட்களுக்கு முன்




நவதுறவியாக 1929ல்




இந்திய பெண்மணியாக முதல் தோற்றம்



முதல் சகோதரி ஆக்னெஸ்



நிர்மல் சிசுபவன் என்ற குழந்தைகள் காப்பகத்தில்
"மனதில் சில கவலைகளின் சுமைகளைத் தாங்க முடியாதபோது இந்த மழலைகளைப் பார்த்துத்தான் சந்தோசம் அடைகிறேன்" -அன்னை திரேசா



அன்னை திரேசாவும், இளவரசி டயானாவும் இளவரசியை வணங்க வைக்கும் பூமியின் தேவதை




பணிவாழ்வில் பூரிப்பு



அன்னை ஆசீர்வதிக்கும் அடுத்த தலைமைச் சகோதரி நிர்மலா




தேசிகோத்தமா விருதின்போது இந்திரா காந்தியுடன்




பாரத ரத்னா விருது



நோபல் பரிசு பெற்ற பிறகு



நீங்காத் துயில் கொள்ளும் அன்னை



உப்பு நதியின் ஊர்வலம்



அன்னையின் கல்லறை




தெரேசாஞ்சலி

## திரேசாஞ்சலி

அன்னையே
ஆயிரக்கணக்கான
அநாதைகளைச் சுமந்த
திண்ணையே!

அழுக்கு ஆன்மாக்களை
வெழுக்க வந்த
வெள்ளை நதியே!

பெலிக்கான் பறவையின்
பெண் வடிவமே!

மேற்கு வாழ்க்கையை
மேற்கொண்ட சேரிகளுக்கு
கிழக்காக வந்தவளே!
விளக்காக நின்றவளே!

கானல் நீருக்கு குடம் சுமந்த
கண்ணீர் சந்ததிக்கு
தண்ணீர் தந்தவளே தாயே!

கணக்குப் பார்க்காமல்
எங்கள் கழனிக்கு வந்த
கனமழையே!

நீயா கண்மூடி -
நெடும்பயணம் மேற்கொண்டாய்?

தொழு நோயாளிகளை
தொட்டுத் தூக்கிய துணிவும்
மனநோயாளிகளை
மார்போடு அணைத்துக்கொண்ட
கனிவும் .... இருக்கிறதே!

அப்பப்பா... அதை..
எந்த வார்த்தைகளால்
எடுத்து வைப்பது

காற்றுக்கு கைகால்
முளைத்த மாதிரி
பூமியெங்கும் பூங்காற்றாய்
நடந்து திரிந்தாயே!

பூமியின் தேவதையே!
நீ புள்ளிவைக்க முடியாத
புனித கவிதை...
எந்த மனிதமும்
தொடமுடியாத தனி மனிதை.

சாக்கடையோர சந்ததிக்கு
சாமரம் வீசிய பூமரமே!

அது என்ன?
உனது காலடிச் சுவடுகளா?
இல்லை - கல்வாரி முகடுகளா?
துன்பங்களின் தொகுப்பா?
இல்லை - துயரங்களின் வகுப்பா?

துறவு வாழ்க்கையின்
மரபுப் போர்வைகளை
விலக்கிக்கொண்டு, மனித நேய
உறவுப் பார்வைகளை
உடுத்தி வந்தவளே!

நீ இறந்தபோது
உலகமே பறந்து வந்ததே!

இருபதாம் நூற்றாண்டையே
இடற வைத்த இறுதி ஊர்வலமே!

உன்னை
நிலவிலே புதைத்திருக்க வேண்டும்
நிலத்திலே புதைத்து விட்டோம்
மன்னித்து விடு அம்மா....
மன்னித்து விடு.

அடுத்த பூமி வரலாம்.
அன்னை திரேசாவே
நீ வருவாயா?

– அன்புடன்
அருட்பணியாளர்
வின்சன்ட் சின்னத்துரை
(இந்தியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்



தயாரிப்பாளர்:-
திருமதி பயஸ் ரதி பீரிஸ்
ஆசிரிய ஆலோசகர், பேசாலை.

## 2003 ம் ஆண்டிற்கான
## க. பொ. சா. த மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

### மிகப் பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக

(1) பங்குத்தளம் என்பது திருச்சபையின் மிகச் சிறிய ஒரு:
1. ஒன்றியம் 2. முக்கிய புள்ளி 3. மறையுடல் 4. குடும்பம்

(2) இலங்கையின் ஐக்கியமும் சமாதானமும் சௌபாக்கியமும் தங்கியிருப்பது :
1. ஆட்சியாளர் கையில் 2. மக்கள் கையில்
3. நாட்டின் கையில் 4. துறவிகள் கையில்

(3) இயேசுவின் பிறப்பின்போது பலஸ்தீனா எந்த நாட்டிற்கு அடிமையாக இருந்தது?
1. பபிலோனியப் பேரரசிற்கு 2. உரோமைப் பேரரசிற்கு
3. அசீரியப் பேரரசிற்கு 4. எகிப்திய பேரரசிற்கு

(4) மனிதத்துவத்தின் மேலான பண்பு எது?
1. பணத்தினைத் தேடல் 2. மோதல்களைத் தவிர்த்தல்
3. வர்க்கபேதம் காத்தல் 4. மனித மாண்பைக் காத்தல்

(5) சாதி மத குலம் பாராது ஒரு மனத்தினராய் வாழ யேசு கூறிய உவமை.
1. பெரிய விருந்து உவமை 2. காய்க்காத அத்திமர உவமை
3. நல்ல சமாரியன் உவமை 4. அறிவற்ற செல்வனின் உவமை

(6) இறைவன் மனிதனுக்கு பரிசாகக் கொடுத்த மிகப் பெரிய பொருள் எது?
1. உடல் 2. ஆன்மா மனச்சான்று 3. உலகம் 4. திருச்சபை

(7) திருச்சபையின் தலைவர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்
1. அன்பு, செபிக்கும் தன்மை, மன்னிப்பு.
2. சமாதானம், அமைதி, நல்லுறவு.
3. நீதி, நேர்மை, பொதுத்தன்மை
4. நேர்மை, மன்னிப்பு, வேதாகம அறிவு

(8) இன்று மக்களுக்கு கல்வியின் மூலம் அவசியமாக வழங்கப்பட வேண்டியது யாது?
1. மனிதத்துவம் 2. இறைவார்த்தை 3. விசுவாசம் 4.ஐக்கிய உறவு

(9) ஆரம்பத் திருச்சபைக்கு பவுல் இட்ட பெயர்:
1. அன்பியம் 2. மறையுடல் 3. பாறை 4. பங்கு

(10) ஆண்டவரின் ஆசீரும் விருப்பமும் படைப்பில் நிறைவேறிய சொல் எது?
1. நல்லது 2. நன்மை 3. நல்லது எனக்கண்டார் 4. நன்றென்றார்.

(11) தொழிலாளர் உரிமையைப் பற்றி திருச்சபை வெளியிட்ட சுற்றுமடல் எது?
1. நேரும் நோவாரும் (1891) 2. இன்றையஉலகில் திருச்சபை (1965)
3. ஒற்றுமையும் முன்னேற்றமும் (1971) 4. மனிதனின் மீட்பர் (1979)

(12) நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். நீதியை நாடித் தேடுங்கள் எனக் கூறிய இறைவாக்கினர்
1. எரேமியா 2. எசாயா 3. மீக்கா 4. ஓசேயா

(13) எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக என்ற இயேசுவின் குருத்துவச் செபம் அடங்கியுள்ள நற்செய்தி
1. புனித லூக்காஸ் 2. புனித யோவான்
3. புனித மாற்கு 4. புனித மத்தேயு

(14) உண்மை நீதியற்றதாக இருக்கும்போது அச்சமூகத்தில் மலர்வது எது?
1. தன்னலம் 2. தண்டனை 3. வேற்றுமை 4. பகை

(15) மிகச் சின்னஞ் சிறிய சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்தவை எல்லாம் ........................
1. கடவுளுக்கு செய்தீர்கள் 2. உதவி செய்தீர்கள்
3. இறையரசுக்காக செய்தீர்கள் 4. எனக்கே செய்தீர்கள்

(16) நற்செய்தி என்றால் என்ன?
1. இறைவார்த்தை 2. நல்ல செய்திகள்
3. அறிவுரைகள் 4. இயேசுக் கிறிஸ்து

(17) கிறிஸ்தவ ஒன்றியத்தின் உறுதிப்பாட்டிற்கு துணையாக இருப்பவர் யார்?
1. குரு 2. கிறிஸ்து 3. பரிசுத்த ஆவி 4. பாப்பரசர்

(18) இன்றைய உலகில் திருச்சபை என்பது...................... வெளியீடாகும்
1. திரிதெந்தீன் 2. அப்போஸ்தலர்களின்
3. ஆவியானவரின் 4. 2ம் வத்திக்கான் சங்க

(19) உண்மையான நன்மைத்தனம் அல்லாதது?
1. தர்ம நெறியில் வாழ்தல் 2. நீதியை நிலைநாட்டல்
3. அநீதிக்கு குரல் கொடுத்தல் 4. இறைவன் முன் தூயவர்களாய் நடத்தல்

(20) கத்தோலிக்க திருச்சபை 'திருயாத்திரை' செல்கிறது எனக் கூறிய சுற்றுமடல் :
1. தொழிலாளர் சாசனம் 2. அவனியில் அமைதி
3. திருவழிபாடு 4. இன்றைய உலகில் திருச்சபை

(21) இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்துகொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார் எனக் கூறிய இறைவாக்கினர் யார்?
1. எசாயா 2. எரேமியாஸ் 3. தானியேல் 4. மீக்கா

(22) உங்கள் பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடையுங்கள் என்று இயேசு யாருக்கு கூறினார்.
1. தம் சீடர்களுக்கு 2. அழைக்கப்பட்ட மக்களுக்கு
3. குருக்களுக்கு 4. மேலதிகாரிகளுக்கு

(23) பூரணத்துவத்தை நோக்காகக் கொள்ளும்போது திருச்சபை தங்கியிருப்பது
1. திருச்சபையின் வாழ்வு (2) சடங்காசாரம் 3. விசுவாசம்
4. திருச்சபைத் தலைவர்கள்

(24) புனிதபவுல் மேற்கொண்ட மறைப்பயணங்கள் எத்தனை?
1. மூன்று 2. ஐந்து 3. இரண்டு 4. ஏழு

(25) புனித லூக்கா பிறந்த இடம் எது.
1. ஜெருசலேமில் 2. உரோமாபுரியில்
3. பபிலோனியாவில் 4. அந்தியோக்கியாவில்

## விடைகள்

(1) 1. ஒன்றியம்
(2) 2. மக்கள் கையில்
(3) 2. உரோமைப் பேரரசிற்கு
(4) 4. மனித மாண்பைக் காத்தல்
(5) 3. நல்ல சமாரியன் உவமை
(6) 3. உலகம்
(7) 3. நீதி, நேர்மை, பொதுத்தன்மை.
(8) 1. மனிதத்துவம்
(9) 2. மறையுடல்
(10) 3. நல்லது எனக்கண்டார்
(11) 1. நேரும் நோவாரும் (1891)
(12) 2. எசாயா
(13) 2. புனித யோவான்
(14) 4. பகை
(15) 4. எனக்கே செய்தீர்கள்
(16) 4. இயேசுக் கிறிஸ்து
(17) 3. பரிசுத்த ஆவி
(18) 4. 2ம் வத்திக்கான் சங்க
(19) 3. அநீதிக்கு குரல் கொடுத்தல்
(20) 4. இன்றைய உலகில் திருச்சபை
(21) 4. மீக்கா
(22) 1. தம் சீடர்களுக்கு
(23) 3. விசுவாசம்
(24) 1. மூன்று
(25) 4. அந்தியோக்கியாவில்

## உங்களுக்கு தெரியுமா?
### மாணவர் மறையறிவுப் பகுதி இல. 6
### கேள்வி கேட்பது நாங்கள்! விடை எழுதுவது நீங்கள்!

கிறீஸ்துவை இவ்வுலகிற்கு தந்தவள் அன்னை மரியாள். அவள் மானிடப் பிறவியாக இருந்தும் இறைவனால் பரலோக பூலோக இராக்கினியாக அதிஉன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டவள். இப்படியான உயர்வு இதற்குமுன் எந்த மனிதப்பிறவிக்கும் கிடைத்தது இல்லை. இனி ஒருவருக்கு கிடைக்கப்போவதும் இல்லை. அன்னை மரியாளோடு அவள் வாழ்வுப் பாதையில் நாமும் நடப்பதுதான் நாம் செபிக்கும் செபமாலை. அன்னை மரியாளின் மகிழ்சியான வாழ்க்கை நிலையோடும் துயரமான நிகழ்வுகளோடும் அவள் மகிமை பெற்ற வாழ்க்கை நிகழ்வுகளோடும் நாமும் ஒன்றிப்பதுதான் செபமாலை செபிப்பதன் அடிப்படைத் தத்துவம். அதனால் செபமாலை நம்மை மோட்சத்துக்கு அழைத்துச்செல்லும் ஏணியாக அமைகின்றது. ஒவ்வோரு காரணிக்கங்களையும் நாம் தியானிக்கும்போதும் மறை உண்மைகளையே தியானிக்கின்றோம்.

கேள்வி

களிகூர்ந்த காரணிக்கம் அதாவது மகிழ்ச்சித் தேவரகசியம் முதலாவதில் கபிரியேல் தேவதூதன் தேவதாய்க்கு மங்களம் கூறியதை தியானிக்கின்றோம். இந்தக்காரணிக்கத்தில் வரும் இவ்வொரு நிகழ்விலும் வாழ்க்கை சம்பவத்திலே - பல மறையுண்மைகள் நிறைந்திருக்கின்றன. அவை எவை? உங்களுக்குத் தெரியுமா? வரிசைப்படுத்தி எழுதி அனுப்புங்கள். நிறைவான விடை எழுதும் ஒருவருக்குப் பரிசு உண்டு. (போட்டி விதிகள் முன்போலவே)
உங்கள் விடைகள் வந்து சேரவேண்டிய இறுதிநாள் நவம்பர் 20ம் திகதி. போட்டி இலக்கம் 5ற்குரிய சரியான விடையையும் சரியான விடை அளித்தவர்கள் விபரத்தையும் நவம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

### இல 4ல் மிகவும் சிறந்த– சரியான விடையளித்து பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்படுபவர்:

**1. அ. மரிய திரேசா, தரம் . 09,**
**எழுத்தூர், மன்னார்.**

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 4 இற்கான கேள்விக்கு ஒருவர் மாத்திரமே விடையளித்திருந்தார்.

### *மாணவர் மறையறிவுப் பகுதி*
### *இல. 4 இற்கான சரியான விடைகள்*

1. ஜோண் பப்ரிஸ் டி லாசால்
2. பிரான்ஸ் நாடு
3. றீம்ஸ் நகர் - பிரான்ஸ், 30. 04. 1651.
4. தந்தை:- லூயிஸ் டி லாசால், தாய்:- நிக்கலோ மொயிற்
5. 21.03.1676
6. 1681ம் ஆண்டு
7. 07.04.1719
8. பாப்பரசர்: 12ம் பத்தினாதர்.
9. கல்விப் பணியூடாக ஏழைச் சிறார்களின் இதயங்களைத் தொட்டு இறைவாழ்வுக்கு அவர்களை அழைத்துச் செல்லல்.
10. அருட்சகோதரர் ஹென்றி திசாநாயக்க.

(மாணவர் மறையறிவுப் பகுதி பற்றிய உங்கள் கருத்துக்கள், அபிப்பிராயங்களை எமக்கு எழுதுங்கள். *(பதிப்பாசிரியர்)*

# அரசியல் அரங்கம்

உரத்த சிந்தனை – உரைப்பது – ஸ்நாபகன்

## மக்கள் எழுச்சி முனைப்புப் பெற வேண்டும்

இன்று இலங்கையில் - குறிப்பாக தென்னிலங்கையில் சமாதானத்திற்கு எதிரான சக்திகளின் குரலே உரத்து ஒலித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் அதே அளவு குரல் சமாதானத்திற்காக - போர் எதிர்ப்புக்காக ஒலிக்கின்றதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
இன்று தமிழர் வாழும் இடங்களில் நடைபெற்றுவரும் பொங்கு தமிழ் நிகழ்வுகள் என்பது தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கைகளை - சமாதானத்திற்கான அவர்களின் தாகத்தை உலகத்திற்கு உரத்துச் சொல்கின்ற ஓர் வழிமுறையாகும்.
யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் அண்மையில் நடந்தேறிய பொங்கு தமிழ் நிகழ்வுகள் மக்களின் அபிலாசைகளை, சமாதானத்திற்கான விடியலுக்கான தாகத்தை சர்வதேச சமூகத்திற்கு உரத்துச் சொல்லி சர்வதேசத்தின் மனச்சாட்சியை உலுப்பி விட்டிருக்கின்றன.
இந்த பொங்கு தமிழ் நிகழ்வுகளை வெறுமனே விடுதலைப் புலிகளின் பிரச்சார நடவடிக்கையாக மட்டும் நாம் பார்க்கக் கூடாது. மாறாக போரின் மாறாத வடுக்களில் இருந்து சிறிது சிறிதாக குணம்பெற்று வரும் தமிழ் சமூகம் ஓர் நிரந்தரமான - நிம்மதியான - கௌரவமான - சமாதான வாழ்வை வாழ்வதற்கான தனது ஆழமான அபிலாசைகளை வெளிப்படுத்துகின்ற ஓர் முயற்சியாகவே இதைக் கொள்ள வேண்டும். எனவே மக்கள் எழுச்சியை மையப்படுத்தி முன்னெடுக்கப்படும் இந்த பொங்கு தமிழ் நிகழ்வுகள் எமது தேசத்தின் குரலாக ஓங்கி ஒலிக்கட்டும்.

## கத்தோலிக்க ஆலயம் .....3ம் பக். தொடர்.

எருக்கலம்பிட்டி, பள்ளிமுனை பகுதியின் எல்லைப் பகுதியில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இப்பகுதி கத்தோலிக்க மக்களினால் புனித அந்தோனியார் தேவாலயம் அமைக்கப்பட்டிந்தது.
ஆரம்ப காலத்தில் கிடுகால் அமைக்கப்பட்டிருந்த இத்தேவாலயம் இரு தடவைகள் தீயிட்டு கொளுத்தப்பட்டதையடுத்து, கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கல்லால் கட்டப்பட்டது. இந்தத் தேவாலய அமைப்புப் பணிகளுக்கு எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் கடந்த செப்ரம்பர் 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு இத்தேவாலயக் கட்டிடம் டைனமற் வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. அடுத்த நாள் 29ந் திகதி திங்கட்கிழமை காலை கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள் தேவாலயம் உடைக்கப்பட்டு இதன் பாகங்கள் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டுக்கொண்டிருப்பதை தடுத்து நிறுத்த முற்பட்டபோது இரு சாராருக்குமிடையில் மோதல் இடம்பெற்றுள்ளது. இந்த மோதலில் ஒரு தமிழ் இளைஞனும், இரு முஸ்லிம் இளைஞர்களும் படுகாயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.
இச்சம்பவத்தையடுத்து பள்ளிமுனை மக்கள் தேவாலயம் உடைக்கப்பட்டதைக் கண்டித்தும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் மன்னார் அரச அதிபர் அலுவலகத்திற்கு முன்னால் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 29ம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை வீதி மறியல் போராட்டத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான கத்தோலிக்க மக்கள் ஈடுபட்டிருந்தனர். மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம், மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு யோசப், பள்ளிமுனை பங்குத் தந்தை ஏ. ஞானப்பிரகாசம், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் என். அருணோதளன் உட்பட பல பொலிஸ் அதிகாரிகளும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அமைதியாகக் கலைந்து செல்லுமாறும், இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தனர்.
இதைத் தொடர்ந்து சம்பவ இடத்தைப் பார்வையிடுவதற்காக நான்கு படகுகளில் மேற்படி குழுவினர் ஊசி மூக்கன் துறைப்பகுதிக்குச் சென்றனர். இங்கு விஜயம் மேற்கொண்ட உயர் மட்டக் குழுவினர் தேவாலயம் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டுள்ளதையும், இதன் கட்டிடப் பொருட்கள் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டிருப்பதையும் மற்றும் திருச்சுரூபங்கள் புதர்ப்பகுதிக்குள் தூக்கி வீசப்பட்டிருப்பதையும் கண்டு கொண்டனர்.
இது ஒரு புறம் இருக்க, மன்னார் பகுதியில் ஏற்பட்ட பெரும் பதற்ற நிலையையடுத்து, 28ம் திகதி நண்பகலுடன் வர்த்தக நிலையங்களை மூடுமாறு பொலிஸார் உத்தரவிட்டனர். கத்தோலிக்க மக்கள் மன்னார் பிரதான வீதியில் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் வாகனப் போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டன. கத்தோலிக்கத் தேவாலயம் தகர்க்கப்பட்டதையடுத்து, மன்னார் மூர் வீதி, உப்புக்குளம், பெரியகடை ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த முஸ்லிம் பள்ளிவாசல்களைச் சுற்றி அதிகளவிலான இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.
மேலும், அதிகளவிலான கலகத்தடுப்புப் பொலிஸாரும், கடற்படையினரும் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேவாலய உடைப்புச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் பள்ளிமுனை மீனவர்களினால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைபரப்பு ஞாயிறு.... மறைபரப்பு ஞாயிறு.... மறைபரப்பு ஞாயிறு.... மறைபரப்பு ஞாயிறு....மறைபரப்பு ஞாயிறு....

# மறைபரப்பு ஞாயிறு தினம் 19.10.2003

# திருத்தந்தையின் செய்தி

## அன்பின் சகோதர, சகோதரிகளே!

ஆரம்பத்திலிருந்தே நான் திருத்தந்தையாகப் பதவியேற்ற நிகழ்வை மரியாளின் விசேட பாதுகாவலில் வைக்க விரும்பினேன். மேலும் இயேசுவின் தாய் மரியாளோடு சீடர்கள் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்த மேலறை அனுபவத்தை மீண்டும் வாழ அனைத்து இறைமக்களுக்கும் பன்முறை அழைப்பு விடுத்துள்ளேன் (தி.ப. 1:14). பெந்தகோஸ்தே தினத்தன்று யெருசலேமின் மேலறையிலிருந்து புறப்பட்டுச் சென்ற சீடர்களைப்போல், தூய ஆவியைப்பெற்று கிறிஸ்துவின் சாட்சிகளாவதை ஆழ்ந்த செப சூழலிலேயே பெற்றுக்கொள்ளலாம் என என்னுடைய முதல் சுற்றுமடலில் (Redemptor – ominis) எழுதியுள்ளேன் (இல. 22).

மரியாள் தாயாக இருப்பதுபோல் திருச்சபை தாயாகிறாள் என்பதை அதிகம் உணர்த்தியுள்ளேன். 2000 ஆம் ஆண்டு மிகவும் முக்கியமான யூபிலி வருடத்தின்பொழுது திருத்தந்தையின் ஆணையில் எடுத்துக்காட்டியதுபோல் திருச்சபை என்பது மரியாள் இயேசுவை தொட்டிலில் வைத்து அணைத்து மக்களினது ஆராதனைக்கும் ஆழ்நிலை தியானத்திற்கும் நம்பிக்கையுடன் தருவதாகும் (இல. 11). எனது வாழ்க்கையின் வழிகாட்டியும் புதிய மறைபரப்பின் தாரகையுமான மரியாளின் துணையோடு திருச்சபை மறைத்தூதர் பாதையில் தொடர்ந்து முன்னேறிச் செல்ல எண்ணியுள்ளது.



## செபமாலை ஆண்டில் மரியாளும் திருச்சபையின் மறைப்பணியும்

சென்ற ஐப்பசி மாதம் நான் புனித இராயப்பரின் பணியை தொடர்ந்தாற்றி 25 வருடங்கள் நிறைவுபெறும் வேளையில் யூபிலி ஆண்டின் ஆன்மீக எழுச்சி தொடர்பாக கிறிஸ்தவ பாரம்பரிய பக்தி முயற்சியாகிய செபமாலை செபித்தலை மீண்டும் புதுப்பிக்கும் முகமாக செபமாலை ஆண்டாக அர்ப்பணிக்கப் பிரகடனப்படுத்தினேன். இறைவனின் திருச்சித்தத்திற்கு ஆம் என்று கூறி மனுக்குலத்தின் மீட்பிற்கு வழிவகுத்து, தொடர்ந்தும், விண்ணிலிருந்துகொண்டு தன்னைத் தேடிவரும் மக்களுக்கு விசேடமாக கஸ்ர நிலையில் இருப்பவருக்கு துணை புரியும் மரியாளின் பார்வையில் வாழ வேண்டிய வருடம் இது. எல்லாக் கண்டங்களிலும் வாழும் இறைமக்கள் கிறிஸ்தவ அழைப்பின் உட்கருத்தை ஆழப்படுத்தி வாழ செபமாலை ஆண்டு ஒரு விசேட சந்தர்ப்பமாக அமைய நான் விரும்புகின்றேன். புனித கன்னி மரியாளின் வாழ்வுக் களஞ்சியத்தினின்று அவளின் வழிகாட்டுதலை பின்பற்றும் ஒவ்வொரு குழுமமும் தனது சொந்த செப தியானத்தையும் மறைபரப்புப் பணியையும் முன்னேற்றமடையச் செய்யும்.

சிறப்பாக மரியாளுக்கென பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வாண்டின் இறுதியில் கொண்டாடப்படும் உலக மறைபரப்பு தினத்திற்கான முன்னேற்பாடுகள் நன்றாக அமைந்தால் அவை திருச்சபை சமூகத்தின் அர்ப்பணிப்பை தாராளமாக ஊடுருவிச் செல்ல வழிவகுக்கும்.

தினமும் கிறிஸ்தவ வாழ்க்கையின் மறையுண்மைகளை தியானிப்பதும், செபமாலை செபிப்பதன் மூலம் மரியாளிடம் தஞ்சம் புகுதலும் திருச்சபையின் மறைபரப்புப் பணியை நிலைநிறுத்த முந்த முந்த உதவி புரியும் செயற்பாடுகள் ஆகும். இந்நிகழ்ச்சியெல்லாம் தன் உள்ளத்தில் பதியவைத்து தியானித்துக்கொண்டிருந்த மரியாளிடம் செபமாலை செபிப்பதால் தூண்டப்படுகின்ற செவிமடுத்தல் என்னும் மனோநிலை இறை மக்களை மரியாளிடம் நெருக்கமாக ஒன்றிணைக்கின்றது. அடிக்கடி இறைவார்த்தையைத் தியானிப்பதானது மரியாளின் இதயத்தைப்போன்று இயேசுவோடு உயிருள்ள ஒன்றிப்போடு நிலைத்து வாழ அது வழிவகுக்கின்றது.

## ஆழ்தியான நிலையில் திருச்சபையால் தியானிக்கப்பட்ட கிறிஸ்துவின் திருமுகம்

*மரியாளுடன் இணைந்து கிறிஸ்துவின் பார்வையில் தியானிக்கவும்* என்ற சொற்கள் அடிக்கடி என் சிந்தனைக்கு வருகின்றன. கிறிஸ்துவின் திருமுகத்தைப்பற்றி கூறும்போது நாம் குறிப்பிடுவது *பரம தந்தையின் ஒரே மகனின் முடிவில்லா மகிமை பிரகாசிக்கும் அவரின் மனிதத்தன்மையே இயேசுவின் திருமுகத்தில் பிரகாசிக்கின்றது.* (கன்னி மரியாளின் செபமாலை ஆண்டு) கிறிஸ்துவின் முகத்தை தியானிக்கும்போது ஒரு ஆழமான உள்ளார்ந்த அவருடைய பரம இரகசியத்தின் அந்நியொன்னிய நிலைக்கு அழைத்துச் செல்கிறது. இயேசுவை விசுவாசக் கண்களுடன் தியானிப்பது பரம திரித்துவத்தின் இரகசியத்தை கிரகித்துக்கொள்ளத் தூண்டுகிறது. *என்னைக் கண்டவன் தந்தையைக் கண்டுள்ளான்,* என்று இயேசு கூறினார். (அரு.14.்.9) செபமாலையுடனும் தூய அன்னையின் வாழ்வுக் களஞ்சியத்திலும், அன்னையின் உதவியுடனும் நாம் ஆன்மீக பயணத்தில் முன்னேறுகின்றோம். (கன்னி மரியாளின் செபமாலை ஆண்டு) மரியாள் எமது ஆசிரியையும், வழிகாட்டியுமாவாள். தூய ஆவியின் செயல்பாட்டினால் மரியாள் சாந்தத்துடன் கூடிய துணிவைப் பெற்றுக்கொள்ள சக்தியளிக்கின்றாள். இச்சக்தி இறைமக்கள் தாங்கள் பெற்றுள்ள இயேசுவின் அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள அவர்களை உந்துகிறது.

ஒப்பற்ற மாதிரியான மரியாளை நாம் எப்பொழுதும் உற்று நோக்குவோம். நற்செய்தியின் எல்லா வார்த்தைகளும் அவளுடைய இதயத்தில் சிறப்பான மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

மரியாள் திருச்சபையின் ஆழ்தியான நிலை ஞாபகார்த்தமாகும். நாம் எவ்வாறு வெளிப்பிரச்சினைகளுக்கு, குற்றமற்றவரின் துன்பங்களுக்கு, தற்பெருமையும் முரட்டுத்தனமுமான அநீத செயல்களுக்கு பிரதிபலிக்கின்றோம் என்பது மிகவும் முக்கியமானது. எமது மீட்புக்காக அமைதியில் எதிரொலிக்கும் இறைவார்த்தையை எமது தாயாகிய மரியாளின் தாழ்மையான வாழ்வுக் களஞ்சியத்தில் இருந்து எடுத்து வாழ்வதன் மூலம் இறைவனின் அமைதியை விசுவாசிகள் தெளிவாக அறிந்துகொள்கிறார்கள்.

## இயேசுவின் திருமுகம் பின்பற்றப்படுதலும் அன்பு செய்யப்படுதலும்

*இறைமக்கள் திருமுழுக்கின் மூலம் பரிசுத்தத்திற்கு அழைக்கப்படுகிறார்கள்.....* இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டின் மறைக்கொள்கை திரட்டு அன்பு பூரணத்துவமடையும்போது இறைமக்கள் பரிசுத்தத்திற்கு அழைக்கப்படுகிறார்கள் என்பதை வலியுறுத்துகிறது. உலகனைத்து மக்களும் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனினதும் அழைப்பு தூய்மையும், மறைபரப்புப் பணியும் ஆகும். மீட்பின் பணியை பாரெங்கும் பரப்புவதற்கும், தூய்மையாவதற்கும் தன்னையே அர்ப்பணிப்பதற்கும் ஒரு தொடர் இருக்கின்றது. விசுவாசிகள் அனைவரும் தூய்மையாகவும் மறைபரப்புப் பணிக்காகவும் அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மீண்டும் கூறினேன். (இல. 20) விசுவாசிகள் செபமாலை மறையுண்மைகளை தியானிப்பதன் மூலம் கிறிஸ்துவைப் பின்பற்றவும் அவருடைய வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளவும் உற்சாகமூட்டப்படுகின்றார்கள். அவ்வாறு வாழ்வதன் மூலம் *நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கின்றார்* என்று புனித சின்னப்பருடன் கூறலாம். (கலா. 2:20)

செபமாலையின் எல்லா மறையுண்மைகளும் பரிசுத்தத்திற்கும் மறைபரப்புக்கும் விசேட புத்தி ஜீவியாக அமையுமானால் ஒளியின் மறையுண்மைகள் நற்செய்தியின் விசேட தோற்ற மாற்றத்தை கொண்டுவருகின்றன. யோர்தானில் இயேசுவின் திருமுழுக்கு, திருமுழுக்குப்பெற்ற நாமனைவரும் மனுமகனின் சுவீகாரப்பிள்ளைகளாக வாழ ஞாபகமூட்டுகிறது. கானாவூர் திருமணத்தில் இறைவனின் வார்த்தைக்கு கீழ்ப்படிவுடன் செவிமடுக்குமாறு மரியாள் அழைக்கப்படுகின்றாள். *அவர் சொல்வதை செய்யுங்கள.* (யோவான். 2. 5) இறையரசை எடுத்துரைப்பதும் மனமாற்றத்திற்கு அழைப்பு விடுப்பதும் தூய்மையான பாதையில் செல்ல விரும்பும் அனைவருக்கும் வழங்கப்படும் தெளிவான கட்டளையாகும். இயேசுவின் உருமாற்றத்தில் திருமுழுக்குப் பெற்றவர்கள் தமக்குக் கிடைக்கவிருக்கும் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றார்கள். நற்கருணை ஸ்தாபித்தலை தியானிப்பவர் அடிக்கடி மேலறைக்கு செல்கிறார். அங்கே இயேசு தன் சீடர்களுக்கு விலைமதிக்கப் பெறாத செல்வமாகிய தேவநற்கருணையை விட்டுச் சென்றார். கன்னிமரியாள் கானாவூரில் கூறிய சொற்களே ஒளியின் மறையுண்மைகளுக்கு அடிப்படையாகும். விண்ணரசு நெருங்கியுள்ளது என்ற எடுத்துரைப்பு, மனமாற்றத்திற்கும் இரக்கத்திற்கும் அழைப்பு, தபோர் மலையில் மறுவுருவெடுத்தல், தேவநற்கருணை ஸ்தாபகம் ஆகிய அனைத்தும் உண்மையில் மரியாளின் இதயத்தின் எதிரொலியாகும். மரியாள் கிறிஸ்துவில் தன் பார்வையை நிலைநிறுத்தி அவருடைய ஒவ்வொரு வார்த்தையையும் செல்வமாக மதித்து எவ்வாறு தனது மகனின் உண்மைச் சீடர்களாக நாம் மாறுவது என வழிகாட்டுகின்றாள்.

## மறைபரப்பும் திருச்சபை கிறிஸ்துவின் திருமுகத்தை எடுத்துரைக்க வேண்டும்

சமூகத் தொடர்புசாதன முன்னேற்றத்திற்கு நாம் இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். ஏனெனில் வேறு ஒருபொழுதும் கிடைத்திராத இயேசுவை எடுத்துரைக்கும் வாய்ப்பு திருச்சபைக்கு இப்போது கிடைத்துள்ளது. இதனாலேயே மணவாளனின் ஒளிரும் முகம் மேலும் தூய ஒளியுடன் பிரகாசிக்கச் செய்ய திருச்சபை அழைக்கப்படுகிறது. இலகுவான முயற்சிகளிலிருந்து தவிர்க்கப்பட்டு திருச்சபை மரியாளினால் நிலைநிறுத்தப்படுகிறது என்பதை திருச்சபை அறிகிறது. இயேசுக்கிறிஸ்துவுக்குத் தன்னை முழுவதும் அர்ப்பணம் செய்த கன்னியாகவும் தன் பிள்ளைகளை முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் தாயாகவும் மரியாளிடமிருந்து திருச்சபை கற்கிறது.

திருச்சபை தனது தாயின் பரிவுப் பார்வையில் தூய ஆவியின் வல்லமைப் பொழிவினால் புத்துயிர் பெறும் குடும்பத்தினைப் போல் திருச்சபை சமூகம் செழித்து வளர்கிறது. மேலும் புதிய மறைபரப்பின் சவால்களை ஏற்று சகோதர சகோதரர்களில் விசேடமாக ஏழை எளியவர்களிலும், நற்செய்தியினின்றும், விசுவாசத்தினின்றும், வெகுதொலைவில் இருப்பவர்களிலும் இயேசுவின் இரக்க முகத்தை ஆழ்ந்து தியானிப்பதன் மூலமும் திருச்சபைச் சமூகம் வளர்கின்றது. விசேடமாக கிறிஸ்துவே வாழ்வும், வழியும் உண்மையும் என்பதை உலகிற்கு அறிக்கையிட திருச்சபை அஞ்சுவதில்லை. வார்த்தை மனுவுருவாகி உலகை மீட்ட இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவே நற்செய்தி என்பதை மகிழ்வுடன் அறிவிக்க அஞ்சுவதில்லை. திறமையுள்ள தூய்மையான மறைப்போதகர்களை உருவாக்குவது அத்தியாவசியம். விசேடமாக மக்களிடையே மறைபரப்பு, அப்போஸ்தலர்களிடம் காணப்பட்ட ஆர்வம் குன்றிப் போகவிடக்கூடாது. செபமாலைப் பக்தி மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த மதிப்புயர்வு பெறுமானால் இறைமக்களை அப்போஸ்தலிக்கப் பணியில் அர்ப்பணிக்க உருவாக்குவதற்கு பலன் அளிக்கும் போதனாக் கல்வியாகவும் ஆன்மீக கருவியாகவும் அது மாறும்.

## திட்டமான நோக்கம்

திருமுழுக்குப்பெற்ற ஒவ்வொருவரினதும் திருச்சபை சமூகத்தினதும், முக்கியமானதும், உறுதியானதுமான கடமையாக மறைபரப்பு ஊக்குவிப்பு தொடரவேண்டும். இதன் மட்டில் திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளுக்கு பிரத்தியேகமான, விசேடமான பங்கு உண்டு. அதை தாராளமனதோடு தொடர்ந்து செய்வதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். திருச்சபைக்கும் மனுக்குலத்திற்கும் அவசியமான வரங்களை இறைவனிடமிருந்து பெற்றுக்கொள்ள, தனியாகவும், குழுவாகவும் செபமாலை செபிப்பதை தீவிரமாக்குமாறு கேட்டுக்கொள்ள நான் விரும்புகிறேன். இவ்வாறு செய்யுமாறு பிள்ளைகள், பெரியோர், இளைஞர், வயதுவந்தோர், குடும்பங்கள், பங்குகள் துறவறக் குழுக்கள், அனைவரையும் அழைக்கின்றேன்.

சமாதானத்திற்கான விண்ணப்பத்தை மற்றெல்லா விண்ணப்பங்களோடு மறந்துவிட விரும்பவில்லை. யுத்தமும் அநீதியும் பிளவுபட்ட இதயத்தின் ஆரம்பம். செபமாலையின் முக்கிய குறிக்கோளான கிறிஸ்துவின் மறைபொருளை தன்மயமாக்கிக்கொள்கிறவர்கள் அமைதியின் இரகசியத்தைக் கற்று அதை தமது வாழ்க்கையின் திட்டமாக்கிக்கொள்கிறார்கள். எங்களுடைய வாழ்க்கையின் வேகத்தோடு செபமாலை வேகமும் உடன் செல்லுமானால், எமது ஒவ்வொருவரின் இதயங்களிலும், குடும்பங்களிலும் மக்களிடையேயும் அமைதியை உண்டாக்க செபமாலை, சலுகைபெற்ற கருவியாகும். மரியாளுடன் இணைந்து அவருடைய மகனாகிய இயேசுவிடம் நாம் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம். உலகெங்கும் நற்செய்தியை எடுத்துரைக்க, மரியாளின் ஆதரவுடன் தாராளமாக எம்மையே அர்ப்பணிக்க நாம் தயங்கமாட்டோம்.

இக்கருத்துக்களுடன், நான் உங்கள் அனைவரையும் உள்ளன்போடு ஆசீர்வதிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா பதில்கள்

கே. பெரியப்பா பல மனிதர்களுக்கு வாழ்வின் முற்பகுதியை விட பிற்பகுதியிலேயே இறைபற்றும் நம்பிக்கையும் வருகின்றது இதற்கு காரணம்?

*நி. நிர்மல றீகன், தரம் - 12. கலைப்பிரிவு, வீரபுரம்.*

ப. முடி நரைக்கும் போதுதான் சிலருக்கு முதிர்ச்சியே முளைவிட ஆரம்பிக்கிறது போலும்.

கே. நாம் ஒருவரை அன்பு செய்யும்போது அவர் நம் அன்பை பகைக்கிறாரே என்ன செய்வது?

*வி. பற்றிக் பிரசாத், சிதம்பரபுரம், வவுனியா.*

ப. நீங்கள் அன்பு செய்பவர் உங்கள் அன்பை கட்டாயம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற எந்தச் சட்டமும் இல்லையே... அன்பு செய்வது அவரவர் இஸ்டம்....!

கே. லஞ்சம் வாங்காத நாடு ஏதேனும் உண்டா?

*பகீரதன், மன்னார்.*

ப. ஊஹூம்..... லஞ்சம் வாங்காத காடு வேண்டுமானால் இருக்கலாம்.



கே. தலைமுடியைக் கோதிவிடும் போது அருமையான தூக்கம் வருகிறதே... எப்படி?

*வீர இரட்சதன், யாழ்ப்பாணம்.*

ப. வந்தா தூங்குங்கள்.....! அதுக்காக இப்படி மொட்டை, வழுக்கைத் தலை வாசகர்களுக்கெல்லாம் கடுப்பு ஏற்படுத்தும் படியான கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது.

கே. தற்போதைய தமிழ் சினிமா பாடல்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

*சாந்தி மேரி, வவுனியா*

ப. பறவாயில்லையே...... இடையிடையே தமிழ் வார்த்தைகள் மறக்காமல் கலந்து விடுகிறார்கள்........!

▣ கே. காலம் என்பது என்ன?

*அற்புதன், தட்சனா மருதமடு.*

ப. நம்பிக்கையின் தொட்டில்: ஆசைகளின் கல்லறை, முட்டாள்களுக்கு கற்றுத்தரும் குரு. புத்திசாலிகளுக்கு ஆலோசகன்.

கே. வாழ்க்கையில் நிம்மதி கிடைக்க வேண்டுமெனில் என்ன செய்வது?

*தர்சினி பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.*

ப. கிடைத்த உறவுகள், வாய்ப்பு வசதிகளைக் கொண்டு போதும் என்ற மனத்தோடு வாழப்பழக வேண்டும்.

கே. சிரிக்கும் படியாக ஓர் ஜோக்?

*வசீகரன், அடம்பன்.*

ப. *ஒருவர்:* எனக்கு என் மனைவி வீட்ல இல்லைன்னா கை ஒடிஞ்ச மாதி இருக்கும்.
*மற்றவர்:* அது பறவாயில்லையே, எனக்கு என் மனைவி வீட்ல இருந்தால்தான் கை ஒடியும்.

கே. எல்லாப் பெண்களும் அழகாய் இருப்பதன் ரகசியம் என்ன?

*நவநீதன், நீலமடு.*

ப. அப்படித்தான் இருக்கும்.... கல்யாணம் ஆகிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்.

கே. காதல் காதல் என்று மாய்கிறார்களே...... காதல் இல்லாமல் வாழ முடியாதா?

*அய்யாத்துரை, உயிலங்குளம்.*

ப. இப்படியெல்லாம் கேட்கத் தோன்றுகின்றதென்றால் உங்களுக்கு வயதாகிவிட்டது என்று அர்த்தம்.

கே. உங்களைப் பார்த்து "டேய் பெரியப்பா..." என்று யாராவது கூப்பிட்டால் என்ன செய்வீர்கள்?

*சத்திய சீலன், அரிப்புத்துறை.*

ப. பழங்கால நண்பர் என்னை அன்போடு கூப்பிடுகிறார் என்று எண்ணி சந்தோஷப்படுவேன்.....!.



கே. வாழ்க்கை எனும் பயணத்தில் எத்தனை முறை தோற்பது?

*புண்ணிய சீலன், முருங்கன்.*

ப. வெற்றி பெறும் வரை.

கே. காதலை முதலில் வெளிப்படுத்துவது ஆண்களா பெண்களா?

*அற்புதன், ஆத்திக்குளி*

ப. கண்கள்

கே. இறப்பைத் தேடி தற்கொலை செய்துகொள்வது சரியா?

*பேரின்ப நாயகம், செட்டிகுளம்.*

ப. தானாக வருகிற ஒன்றை நாமாக தேடிக்கொள்வதில் வீரமும் இல்லை. விவேகமும் இல்லை.

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 19 - 06 - 1919



உதிர்வு 24 - 10 - 2002

### சில்வேஸ்ரர் அந்தோனி துரம் இளைப்பாறிய அதிபர்
### (பேசாலை)

எங்களுக்கு பாசம் காட்டி, அறிவு ஊட்டிய அன்புத் தெய்வமே, தரணியில் உயர்ந்து விளங்க ஊக்கம், கல்வி ஊட்டிய எங்கள் உயிரினதும் மேலான அன்புத் தெய்வமே, ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் கடந்து சென்றாலும் உமது நினைவு மட்டும் எம்மை விட்டு நீங்காது இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பேசாலை புனித வெற்றிநாயகி தேவாலயத்திலும், பரித்தித்துறை புனித தோமையார் தேவாலயத்திலும், மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலும் 24.10.2003 அன்று வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உமது பிரிவால் துயருறும் மனைவி அ. செசிலி குருஸ், சகோதரி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், இவர் காலம் சென்ற பரித்தித்துறையை சேர்ந்த மரியாம்பிள்ளை பிரான்சிஸ் அவர்களின் உடன் பிறவா சகோதரர் ஆவார்.

## 10ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 - 04 - 1909



உதிர்வு 27 - 10 - 1993

### திரு. திமிங்குபிள்ளை மனுவேற்பிள்ளை
### (கங்காணி தீவு, நானாட்டான்)

எமது பாசத்திற்கும் அன்புக்கும் உரித்தான அப்பு, எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து பத்து ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள், உங்கள் கடின உழைப்பின் பாதைகள், உங்கள் நேர்மையான செயல்கள், பாசத்தின் கோடுகள் எல்லாம் எம்மை தினமும் வாட்டுதப்பா. உங்கள் குடும்பத்திற்காக, பிள்ளைகளுக்காக வாழ்ந்து எம்மையெல்லாம் வாழ்க்கையின் ஏணிப்படிகளில் நடந்திட வழிகாட்டிய தெய்வம் நீங்கள் அப்பா.

சாந்தியும் அமைதியும் வழங்கிடும் வானக தந்தையே, எங்கள் பாசம் நிறைந்த அப்புவிற்கு, நித்திய பேரின்பத்தை நிறைவாக அளித்தருளும்.

பாசமும் நேசமும் நிறைந்த பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார், நண்பர்கள்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 06 - 01 - 1972



உதிர்வு 24 - 10 - 2002

### செ.சத்தியகுமார்
### (7ம் வட்டாரம், விடத்தல் தீவு)

உன் உடல் மண்ணோடு சங்கமித்து ஓர் ஆண்டு முடிந்தது - ஆயினும் நம்ப முடியவில்லை உன் உடல் வலிமையுள் நோய் புகுந்ததை இரும்பின் திடமுன்னில் இருந்தாலும் இழகிய ஈழ மணம் கொண்டவனே காணும் இடங்களெல்லாம் - உன் சிரித்த முகம் மறையவில்லை. நல்லோர்க்குக் காலமுண்டு என்பவனே - அதனாலோ நல்லவனாம் தேவனோடு சங்கமம் ஆகிவிட்டாய் - உன் அன்பு மணம் ஆண்டவனில் அமைதி பெற அன்பனாம் அவரிடம் அயராது வேண்டுகின்றோம்.

இவரது பிரிவால் துயருறும் பெற்றோர், சகோதர, சகோதரிகள் உறவினர், நண்பர்கள்.




# வளனகம்
## உங்களை வரவேற்கின்றது



வளனகத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருட்கள் நூல்கள் பற்றிய விபரங்கள்

- திருவிவிலியம், புதிய ஏற்பாடு, சிறுவர் வேதாகமம், பொக்கற் பைபிள்
- திருமணம், பிறந்தநாள் இன்னும் பல்வேறு விழாக்களுக்கான இறைவார்த்தை பொறிக்கப்பட்ட வாழ்த்து மடல்கள்
- முதல் நன்மை, உறுதிப்பூசுதல் நினைவு மடல்கள்
- பல்வேறு படங்களுடன் - பல்வேறு அளவுகளில் ஸ்ரிக்கர்கள். -
- விசேட வைபவங்களுக்கு அன்பளிப்பாக கொடுக்கக்கூடிய இறைவார்த்தை பொறிக்கப்பட்ட அன்பளிப்புப் பொருட்கள்
- அனைத்து வகையான செபப் புத்தகங்கள்,
- மோட்ச பாதை புத்தகம்
- பல்வேறு வகையான செபமாலைகள், குருசுகள், வரவணிக்கங்கள்-
- பல அளவுகளைக் கொண்ட இயேசு, மாதா, புனிதர்களின் படங்கள் - சுருபங்கள்,
- ஆலயத்திற்குரிய நற்கருணை, வைன் பாத்திரங்கள், நற்கருணைத் தட்டுக்கள், மணிகள், துருவில்கள், கதிர்ப்பாத்திரங்கள்-
- முதல் நன்மை பிள்ளைகளுக்குரிய பல நிறத்திலான அழகிய மெழுகுதிரிகள், படங்கள்
- பல வகையான இயேசு, மாதா படத்திலான திறப்புக் கோர்வைகள்
- பல்வேறு தரப்பினருக்கும் உரிய பல்வேறு பயனுள்ள கிறிஸ்தவ நூல்கள்
- மறையாசிரியர் தேர்வு 1,2,3 ற்கான புத்தகங்கள்,
- க.பொ.த. உயர்தர கிறிஸ்தவ பாடப்புத்தகங்கள்,
- பல்வேறு வழிபாட்டுக் காலத்திற்குரிய கிறிஸ்தவ தியான, பஜனை, நடன- பாடல்களைக் கொண்ட ஒலிநாடாக்கள்

பாடசாலை உபகரணங்கள் - கொப்பி, பென், பென்சில் கொம்பாஸ் முதலிய அனைத்துப் பொருட்களையும் வளனகத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

(முக்கிய குறிப்பு: வளனகம் வாரம் முழுவதும் (சனி தவிர்ந்த)அனைத்து நாட்களும் காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை திறந்திருக்கும்) வாருங்கள்! பாருங்கள்! வாங்குங்கள்!


## *"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"* மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர் - நண்பரின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 200யும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 1000யும் (10 யூரோ) அனுப்பவும். சந்தாப் பணத்தை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின் வங்கியின் பெயர்: Hatton National Bank Ltd. Mannar பணம்பெறுபவர் பெயர்: the Editor – MANNA. வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No. 02 – 1678001 - 5 என்று குறிப்பிடவும்.

## நீங்காத நினைவுகள் பற்றிய அறிவித்தல்

நீங்காத நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந்நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில 20ம் திகதிக்கு முன்பு எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக் குறிப்பு, (அதாவது இறந்தவரின் முழுப்பெயர், இடம், பிறந்த திகதி ஆண்டு மாதம், இறந்த திகதி ஆண்டு மாதம், அஞ்சலிக் கவிதை அல்லது வசனம்) புகைப்படப் பிரதி என்பவற்றுடன் கட்டணமாக ரூபா 750 ஆகியவற்றை அனுப்பிவையுங்கள். தகவல் தருபவரின் பெயர் முகவரியை (தொலைபேசி இருந்தால் அதன் எண்ணையும்) தவறாமல் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலையத்தில் பணிபுரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரிக்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனுப்பிவைப்போம்.
(பதிப்பாசிரியர்)

## பெரியப்பா பதில்கள்

பலர் இப்பகுதிக்கு உப்புச்சப்பற்ற கேள்விகளை அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பிவிட்டு "ஏன் எனது கேள்வியை பிரசுரிக்கவில்லை?" என முறையிட்டு கடிதங்கள் எழுதுகிறார்கள்.
உங்கள் கேள்விகள் தரமானதாக - அறிவுத்தேடல் நிரம்பியதாக - நகைச்சுவையாக இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். அப்படி இல்லாத கேள்விகளை பெரியப்பா நிராகரித்துவிடுவார். (பதிப்பாசிரியர்)

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.
மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு - இலங்கை ரூபா 200
வெளிநாடு - இலங்கை ரூபா 1000
(10 யூரோ)


## அனைத்துத் தொடர்புகளுக்கும்



பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar,
Sri Lanka.



தொலைபேசி : 023 - 2232377




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல. 18

## யாக்கோபு எழுதிய திருமுகம்

உங்கள் விடைகளை 20. 11. 2003 க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். சரியான விடையை எழுதியவர்களில் 50 பேர் பாராட்டுக்குரியர்வர்களாக தெரிவுசெய்யப்படுவார்கள்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 02 | | | | | 03 |
| 04 | | | | | | * | 05 | | | |
| | * | | | | 06 | | | 07 | | |
| | | * | | | | 08 | | | | |
| | | 09 | | | | | | | | |
| | | | | | 10 | * | | | 11 | |
| * | 12 | | 13 | | | | * | | | |
| | | | | 14 | | | | 15 | | |
| | | | | | | | 16 | | 17 | |
| | | 18 | | | | | | | * | |
| 19 | 20 | | | | | 21 | | | | 22 |

### வலமிருந்து இடம

3. உங்களுக்கு வரப்போகும் ---------------------------- நினைந்து அலறி அழுங்கள்.
6. --------------------- யான சோதனைகளுக்கு உள்ளாகும் போது நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டிருங்கள்.
7. உயிர் இல்லாத உடல்போல் -------------------- களில்லாத நம்பிக்கையும் செத்ததே.
8. உங்களிடையே ஞானமும் அறிவாற்றலும் உடையவர் ----------------- இருந்தால் ஞானம் தரும் பணிவாலும் நன்னடத்தையாலும் அவற்றைக் காட்டட்டும்.
10. இப்பொழுதோ நீங்கள் வீம்பு பாராட்டிப் ---------------------- கொள்கிறீர்கள்.
15. ------------------------- நடுவர் வாயிலில் நின்று கொண்டிருக்கிறார்.
16. உலகுக்கு நண்பராக விரும்பும் எவரும் கடவுளைப் பகைப்பவர் ------------------ - (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
21. எலியா நம்மைப் போன்ற ----------------------- மனிதர்தாம்.

### இடமிருந்து வலம்

1. பேச்சில் -------------- நிறைவு பெற்றவராவர்.
4. ஆண்டவரின் -------------------- பொறுமையோடிருங்கள்.
5. மாறாக நீங்கள் ஆள்பார்த்துச் ———— பட்டால் நீங்கள் செய்வது பாவம்.
9. அதை ஆண்டவர் அவருக்கு ----------------- கருதினார்.
13. அது நெருப்புப்போல் உங்கள் சதையை -----------------விடும்
14. உங்களுள் பலர் போதகர் ----------------------விரும்ப வேண்டாம்
15. -------------------- மனத்தோரே உங்கள் உள்ளங்களைத் தூய்மைப் படுத்துங்கள்
18. நீங்கள் கேட்டாலும் ஏன் ---------------- (குழம்பியுள்ளது)
21. அச்சட்டத்துக்கு --------------------த் தீர்ப்பு அளிக்கின்றனர் (3ம் 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)

### மேலிந்து கீழ்

1. ஒருவர் சட்டம் ஒன்றில் மட்டும் --------------------- அவர் அனைத்தையும் மீறிய குற்றத்துக்குள்ளாவார்
2. உலகுக்கு ----------------- விரும்பும் எவரும் கடவுளைப் பகைப்பவர் ஆவார்.
3. இவ்வுலகில் ஆடம்பரமாகவும் -------------------வாழ்ந்தீர்கள்
5. ஒருவரிடம் நம்பிக்கை இருப்பதுபோல் இன்னொருவரிடம் ---------------------- இருக்கின்றன என யாராவது சொல்லலாம்.
9. உங்களைக் கொடுமைப்படுத்தி ----------------- த்துக்கு இழுத்துச் செல்வோர் யார்?
12. உங்களுக்கு வரப்போகும் இழி ----------------- நினைத்து அலறி அழுங்கள்.
13. ------------------ செய்தவர்களின் கூக்குரல் படைகளின் ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது.
14. -------------------- பெரிய காரியங்களைச் சாதிப்பதாக அது பெருமையடிக்கிறது.
15. ஏனெனில் ஆண்டவர் மிகுந்த பரிவுள்ளமும் ------------------------மும் கொண்டவர்.

### கீழிருந்து மேல்

11. ஒவ்வொருவரும் ------------------------- வேகமும் பேசுவதிலும்,சினம் கொள்வதிலும் தாமதமும் காட்ட வேண்டும்.
12. நல்ல கொடைகள் அனைத்தும் ------------------------ வரமெல்லாம் ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன.
13. அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த ------------------ என்னும் விதையிலிந்து நீதியென்னும் கனி விளைகிறது
15. செருக்குற்றோரை அவர் ———— யுடன் நோக்குகிறார்.
17. தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ ------------------- காட்டுவார்.
19. -------------------- எதிர்த்து பொய் பேச வேண்டாம்.
20. உங்கள் வயலில் அறுவடை செய்த. வேளையாள்களுக்குரிய ----------------------- ப் பிடித்துக் கொண்டீர்கள்.
21.ஆனால் அவர் உங்களை ----------------- நிற்கவில்லை.
22.நேர்மையாளருடைய ---------------- மிக்க மன்றாட்டு பயன் விளைவிக்கும்.

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 17றகான முடிவுகளை நவம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 16ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
ப. கிறேசியன் கூஞ்ஞ,
தலைமன்னார் கிராமம்,
தலைமன்னார்

*இரண்டாம் பரிசு*
அ. ஜெனி, வெல்கம் லேன், பாலையூற்று, திருகோணமலை.

*மூன்றாம் பரிசு*
P. மனோகரி, No - 27, சென்பீற்றர்ஸ் லேன், நிந்தனி, புத்தளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 274 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 257 பேர்

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 16ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

# பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. எம். மேரி சரணியா, இலக்கம் 53/10, கற்குழி, வவுனியா.
2. இ. நிலானி சோசை, 2ம் வட்டாரம், வங்காலை.
3. ஜெ. ஜெரோம், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
4. சி. லிற்வின் சத்தியா, ஏ.எஸ். அரசன். இறம்பைக்குளம், வவுனியா.
5. அ. அருமைக் குயின்ரன், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.
6. யே. வென்கியூஸ், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.
7. பி. றெமீந்துப்பிள்ளை, நாகுட்டான்.
8. றெ.பி. மரிய டினேசன், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
9. யாகப்பு மரிய நேசன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
10. ஆர். ஆன்றொமிலா லெம்பேட், தலைமன்னார் கிராமம்.
11. ப. பிரேமலதா றோச், 5ம் வட்டாரம். பள்ளிமுனை, மன்னார்.
12. தோம்சன் பிலிப், புளோரி வீதி, மேற்பிட்டிமுனை, கல்முனை.
13. தோ.ஜோன்சுரேந்தர்,மே.பா.ஏசெங்குந்தர் வீதி, ஆரையம்பதி -02
14. ஏ. பத்மினி குரூஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
15. அ. ஜெயமேரி, பிற்றத்மலை, மே.பி.ஹப்புத்தளை.
16. க. சகாயதாசன், ஆலங்குளம், வட்டக்கண்டல்.
17. ரி. கௌரி, தி.கு. கன்னியர் மடம், தே.ஆ. நிலையம், தலவாக்கலை.
18. ஆர். றஞ்சினி, பனங்கட்டிக் கொட்டு (மேற்கு) மன்னார்.
19. ம. பிராங் ட.்.வ், சிறிய குருமடம், ஆணைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
20. ப. ஞான சௌந்தரி, பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
21. எஸ். ஜோச், மாவிலங்கேணி, உயிலங்குளம்.
22. வெ. லொலிற்றா பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
23. ஞா. மேரி மெற்றில்டா, துள்ளுகுடியிருப்பு, பேசாலை.
24. எ. ஞான சஞ்ஞிதன் கூஞ்ஞ, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
25. யூ பிரின்சியா குரூஸ், முள்ளிக்குளம், சிலாபத்துறை.
26. கிறேசி சோசை, 6ம் வட்டாரம், வங்காலை.
27. அ. மரியசீலி, பெரிய கோமரசங்குளம், வவுனியா.
28. பீ. டயானி, திருக்குடும்பக் கன்னியர் மடம், மன்னார்.
29. லு. சுவிற்றி சோசை, 2ம் வட்டாரம், வங்காலை.
30. ஜ. ஞானி, கோதை முருங்கன்பிட்டி, முருங்கன்.
31. எஸ். நிலானி, ஜோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
32. வி. மடோனா, மூர்வீதி, மன்னார்.
33. நிறொசா, தட்சனா மருதமடு, மடு.
34. திருமதி.நந்தினி அலைக்சாண்டர், தலைமன்னார் பியர்.
35. எஸ்.அன்ரனிதாஸ், பிரதேச செயலகம், மன்னார் பட்டினம், மன்னார்.
36. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
37. சூ. டோமினிக் ஜாண்சன், பள்ளிமுனை, மன்னார்.
38. தேவிகா பத்மராஜா, பெத்தனி வயல்வீதி, மன்னார்.
39. ராணி அசரத்தினம், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
40. யே. மரின்சிலி, கன்னாட்டி, அடம்பன்.
41. பீ. கஸ்தூரி, இல.25 1.்.1 ராணி மில்வீதி, இறம்பைக்குளம், வவுனியா.
42. கரோலின் பீரிஸ், முத்தரிப்புத் துறை.
43. றொ. றெபேக்கா, சிறு நீலாசேனை, உயிலங்குளம்.
44. ஜீன் சிந்தியா சந்தியாப்பிள்ளை, கார்மேல் மடம், கல்முனை.
45. நே. லீயோ ஞானராஜ், ஜீவனகர், முருங்கன்.
46. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல் தீவு.
47. டக்சியா, இல. 76 100 சாந்தி புரம் மன்னார்.
48. ஆ. மரியத்திரேசா, எழுத்தூர், மன்னார்
49. ப. சந்திர வதனா, தி.கு.க. மடம், கரம்பொன், ஊர்காவற்துறை.
50. கிறிஸ்ரினா ஜோசப், பிளசட்வேஜினகொன்வேன்ற், சிங்கரமுல்ல, களனியா.

## *விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி*

*இல. 16 (தீத்து, பிலமோனுககு எழுதிய திருமுகங்கள்)*

### சரியான விடைகள்

| இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் |
|---|---|
| 1. நம்பிக்கையின் (பில.1:6) | 2. இந்நிலை (தீத். 1:4) |
| 3. வேண்டல்களில் (பில.1:4) | 5. புத்துயிர் (பில.1:7) |
| 4. செய்தியை (தீத்.1:4) | 8. இக்கூற்று (தீத். 3:8) |
| 7. உழன்றோம் (தீத் 3:3) | 9. காலத்தை (தீத்.3:12) |
| 10. தூதுவனாக (பில.1:9) | 14. அன்பை (பிலி.1:7) |
| 17. அடிமை (தீத்.2:9) | 16. நடந்து (தீத். 2:9) |
| 19. புத்துயி (பில. 1:7) | 22. இதயத். (பல. 1:12) |

| மேலிருந்து கீழ் | கீழிலிருந்து மேல் |
|---|---|
| 1. நற்செயல் (தீத். 1:4) | 10. தூய ஆவியை (தீ.3:6) |
| 2. இடமளிக்காதே (தீ.1:15) | 13. வார்த்தை (தீத்.2:5) |
| 6. கடிந்து (தீத். 2:15) | 15. பணிந்து (தீத் 3:1) |
| 7. உடையவர் (தீ. 2:1) | 18. நலந்தரும் (தீத்.2:1) |
| 10. தூயநடத் (தீ.2:3) | 19. புதுப்பிறப்பு (தீத் 3:5) |
| 11. கண்ணியத் (தீ.2:7) | 20. செய்வீர். (பில.1:21) |
| 12. சபைக் (தீத், 1:7) | 21. மேலானவனாக (பி. 1:21) |

## டிலாசால் அருட்சகோதரர்களின் ...... 3ம் பக்கத் தொடர்ச்சி

அருட்சகோதரர் எச்சவெறியா அவர்கள் மத்திய அமெரிக்காவில் உள்ள கோஸ்ரா றிக்கா என்ற மாநிலத்தில் 8. 07. 1942ல் பிறந்தார். 25 வருடங்களுக்கு மேலாக இவர் குவாட்டமாலா, நிக்கிராகுவா போன்ற இடங்களில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் பணி செய்தார். இவருடைய சொந்த சகோதரர் 1998ல் இருந்து இவருடைய சொந்த நாடான கோஸ்ரா நிக்காவின் ஜனாதிபதியாக இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அருட்சகோதரர் எச்சவெறியா எழுத்துத் துறையிலும், கற்பித்தல் துறையிலும் நிறைந்த அனுபவம் மிக்கவர். இவர் உலகின் 86 நாடுகளில் உள்ள டிலாசால் துறவற சகோதரர்களின் தலைவராக விளங்குகிறார்.

## தேவாலயம் தகர்க்கப்பட்டது தொடர்பாக..... 5ம் பக்கத் தொடர்ச்சி

இதனைப் பார்க்கும்போது எமது மனதே நொருங்கி விட்டது... என விளக்கினர். எருக்கலம்பிட்டியைச் சேர்ந்தவர்களுடைய கருத்து, ஏன் தேவாலயத்தைக் கட்டினீர்கள் என்பதைத் தவிர வேறெதனையும் கூறவில்லை. அமைச்சர் நூர்தீன் மஷூர் எருக்கலம்பிட்டியில் முன்னர் பத்தாயிரம் பேரளவில் மக்கள் இருந்துள்ளனர். தற்பொழுது இருபதாயிரம் பேர் வரையில் உள்ளனர். ஆகவே, மக்கள் குடியேறுவதற்கு அந்தப் பகுதி தேவையென்று கூறினார்.

மன்னார் அரச அதிபர் கூறுகையில் ஊசி மூக்கன்முனை முஸ்லிம்களுக்கோ, கத்தோலிக்கர்களுக்கோ சொந்தமில்லை... அது அரசின் காணி. தேவாலயம் கட்டுவதென்றால், எழுத்தில் விண்ணப்பிக்க வேண்டும். ஏற்கனவே, நீண்ட காலம் அங்கு வழிபாட்டுமுறை இருந்துள்ளது. தற்போதைய சிக்கலான சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால்... பதினைந்தடி அகலமும், இருபத்தைந்தடி நீளமும் கொண்ட தகரத்திலான கொட்டகை அமைத்து... சீமெந்தினால் தரையையும் செப்பனிடலாம். நிரந்தரமான கட்டிடம் அமைக்க அனுமதியைப் பெற்று அதனைப் பின்னர் பார்க்கலாம் என்று கூற இடையில் அமைச்சர் நூர்தின் மஷூர் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்தவர்களைப் பார்த்து, நீங்கள் என்ன வாயை மூடிக் கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள், உங்களுக்காக நான் கதைக்க வேண்டியதாய்யுள்ளதே என்றார்.

இதன்போது அமைச்சரை நோக்கிய பள்ளிமுனைப் பங்குத் தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார் நீங்கள் ஒரு பக்கம் சார்ந்து கதைக்கின்றீர்கள் என எடுத்துக்கூறி இது நியாயம் இல்லையென விளக்கினார். விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் மூர்த்தி இந்தச் சம்பவம் தொடர்பாகக் கூறுகையில், ஞாயிறு இரவு வேளை இது திட்டமிட்டே நடத்தப்பட்ட சம்பவம். இது குழப்பங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டுச் செய்யப்பட்டதெனக் கூறினார். மீண்டும் அமைச்சர் நூர்தீன் மஷூர் இல்லை, இல்லை. இது திங்கள் காலையில் நடைபெற்ற சம்பவம் எனக்குத் தெரியும் எனவும் கூறியுள்ளார். அதற்கு மூர்த்தி உங்களிற்குத் தெரியும் என்றால்... ஏன் அதனைத் தடுக்க முற்படவில்லை, பொலிஸ் காவலையும் போட்டிருக்கலாம் தானே எனவும் கேட்டுள்ளார். அமைச்சர் நூர்தீன் மஷூர் ஏற்கனவே அரச அதிபருடனும், மன்னார் பொலிஸாருடனும் இது பற்றிப் பேசியுள்ளேன் எனக் கூறினார். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துக் கூறுகையில்... இந்தச் சம்பவத்தை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், மன்னார் வாழ் மக்களின் ஒற்றுமையினைக் குலைக்க இதுபோன்ற நடவடிக்கைகளே போதும் எனவும் ஆகவே, இப்படியான சம்பவங்கள் இனி நடைபெற அனுமதிக்கக் கூடாதெனவும் வலியுறுத்தினார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறுகையில், இன்று அரசியல் சூழ்நிலை முக்கியமான கட்டத்தில் உள்ளது. அமைதி, சமாதானம் என முயற்சிகள் ஒருபுறம் நடைபெற நாம் இன்னொரு புறம் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடாது என இப்படியான சம்பவங்களில் ஈடுபடுவோரைக் கேட்க வேண்டியதாகவுள்ளது என்றார்.

மன்னார் ஆயர் இந்தச் செயல் பிழையானது இதனைக் கண்டிக்க வேண்டும். சமாதானச் சூழலில் இது வரவேற்கக் கூடியதல்ல... நாமெல்லாம் முடிவெடுக்க வேண்டும். இனி இப்படி நடக்கக் கூடாது என்றே நானும் கேட்கிறேன் எனக் கூறினார்.

முடிவு: தகர்க்கப்பட்ட ஆலயத்தில் தகரக் கொட்டகை அமைப்பதென்றும் தரைக்குச் சீமெந்து போடுவதென்றும் முடிவு எடுக்கப்பட்டது. சந்தித்துக்கொண்டவர்கள் வெளியே வர அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை... ஆத்திரத்தில் வாய்க்கு வந்தபடி பேசினர். எவர் சமாதானப்படுத்த முற்பட்ட போதும் மக்கள் ஆவேசமாகவே நின்றனர். இந்த நிலைமை சுமார் இருபது நிமிடங்கள் வரை நீடித்தது. மன்னார் ஆயர் பண்பாக மக்களுக்கு எடுத்துக் கூறியதென்னவென்றால்... கிறிஸ்தவர்களாகிய நாம் மன்னிப்பை ஏற்க வேண்டும். அமைச்சர் ஐந்து தடவை மன்னிப்புக் கேட்டுள்ளார். தற்போது முடிவொன்றை அனைவரும் எடுத்துள்ளதால் நாங்களும் அதற்கு இடம் கொடுக்க வேண்டுமெனக் கூறினார்.

மக்கள் முடிவிற்குக் கட்டுப்பட்டு அந்த இடத்தை விட்டு விலகிச் சென்றார்கள். இதனை மதித்தே ஆகவேண்டும். இன்றைய அரசியல் சூழ்நிலையில் எதனைச் செய்யக்கூடாதோ அது செய்யப்பட்டுள்ளது. இதனை அனைவரும் இணைந்து அமைதிப்படுத்தியதனால் செய்யத் தூண்டியவரின் எண்ணம் நிறைவேறாமல் போயிருக்கலாம். அமைதிப்படுத்தியவர்கள் அனைவருக்கும் பாராட்டுத்தெரிவிக்க வேண்டும்.

*(நன்றி - தினக்குரல்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

மடு வீதியில் உள்ள சிறி போதிராஜ விகாரை மீண்டும் திறப்பு

# இடம் பெயர்ந்து சென்ற சிங்கள மக்களை மீண்டும் குடியமர்த்துங்கள்

## விகாரை திறப்பு விழாவில் மன்னார் ஆயர் வேண்டுகோள்

மடு வீதியில் உள்ள ஸ்ரீ போதிராஜா விகாரையை மீண்டும் திறந்து வைத்ததைப்போன்று இங்கிருந்து இருப்பிடங்களைவிட்டு இடம் பெயர்ந்து சென்ற சிங்கள பௌத்த மக்களையும் மீள் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மன்னார் ஆயர் கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த செப்ரம்பர் மாதம் 29ம் திகதி மடு வீதியில் உள்ள ஸ்ரீ போதிராஜ விகாரையை அவர் திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றியபோதே மேற்படி கருத்தினைத் தெரிவித்தார். அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் உரையாற்றிய மன்னார் ஆயர் மேலும் கூறியதாவது, யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பதாக இவ்விடத்தில் நன்கு முன்னேற்றம் கண்ட பன்சலை ஒன்று இருந்தது. அதில் பௌத்த பிக்கு ஒருவரும் இருந்தார். யுத்தத்தின்போது இந்த பன்சலை அழிந்து போனதன்பின்னர் இன்று அது மீண்டும் வழிபாட்டிற்காகத் திறக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இதனைத் திறந்து வைப்பதைப்போன்றே இப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற சிங்கள பௌத்த குடும்பங்களையும் இங்கு குடியமர்த்த வேண்டும். இம்முயற்சியானது வடக்கையும் தெற்கையும் இணைக்கும் முயற்சியாக வேண்டும். இதற்கருகில் அமைந்துள்ள மடு தேவாலயம் பற்றி அனைவரும் அறிந்திருப்பீர்கள். இந்தத் தேவாலயம் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்திருப்பினும் சகலருக்கும் சென்று வரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இந்த விகாரையில் மத வழிபாடுகளைப் போன்றே சமூகத் தேவைகளையும் பூர்த்திசெய்து கொடுக்க வேண்டும் எனக் கூறினார். இந்த வைபவத்தில் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, போதிராஜ விகாரையின் பிரதம தேரர் சிறி பாரதி தேரர், மாதம்பகம அஸ்ஸஜி தேரர், மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி என். கோச்சா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# முப்பது புதிய கருதினால்மார்கள்

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் கடந்த செப்ரம்பர் மாதம் 28ம் திகதி 30 புதிய கருதினால் மார்களை நியமனம் செய்தார். கருதினால்களாக தரம்உயர்த்தப்பட்டவர்களில் முக்கியமானவர்களின் பெயர்களை கீழே தருகின்றோம்.

ஜீன் லூயிஸ் ரவுரன் (பிரான்ஸ் வத்திக்கானின் வெளிநாட்டமைச்சர்) ரெனாட்டோ மார்ட்டினோ (இத்தாலி - நீதி, சமாதானத்துக்கான பாப்பரசர் பேரவையின் தலைவர்,) பிரான்சிஸ்கோ மாட்சிசானோ (இத்தாலி - புனித இராயப்பர் பசிலிக்காவின் முதன்மைக் குரு), யூலியன் ஹரன்ஸ் (ஸ்பெயின் - வத்திக்கான் அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர்) ஜவியர் லொசானோ பரகன் ( மெக்சிகோ - வத்திக்கான் அலுவலகத்தின் சுகாதார நலன்களுக்கான தலைவர்), ஸ்ரிபன் பெமியோ கமாவோ (ஜப்பான் - வத்திக்கான் அலுவலகத்தின் குடியேற்ற வாசிகளின் தலைவர்) அற்றிலியோ நிக்கோறா (இத்தாலி-வத்திக்கானின் திருமணச் சட்டங்களுக்கான நிர்வாகி)

ஏனையவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பேராயர்களிலிருந்து தெரிவு செய்யப் பட்டவர்களாவர்.

# வன்முறைக்கு பதில் கிறிஸ்தவமே

## தேவாலயம் தகர்க்கப்பட்டது தொடர்பாக

### பள்ளிமுனைப் பங்குத்தந்தை மன்னாவுக்கு விசேட பேட்டி



26. 09. 03ல் வெள்ளி இரவு முந்தல் என்று பள்ளிமுனை மக்களால் அழைக்கப்படும் ஊசி மூக்கன் துறையில் கட்டப்பட்ட புனித அந்தோனியார் ஆலயம் முதல் முதலாக இடிக்கப்பட்டது. அப்படியிருந்தும் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் நேசிக்கும் பரந்த உள்ளம் கொண்ட பள்ளிமுனை கத்தோலிக்க மக்கள் பொறுமையோடுதான் இருந்தார்கள். கடந்த 29.09.03ல் திங்கட் கிழமை காலை பெருந்தொகையாக எருக்கலம்பிட்டி முஸ்லீம் மக்கள் எருக்கலம்பிட்டியில் இருந்து கிட்டத்தட்ட 5 மைல் தூரத்தில் இருக்கும் இந்த 60 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த கோவிலை இடித்து தரைமட்டமாக்கினார்கள். இதனை நேரடியாக கண்ணுற்ற பள்ளிமுனை மக்கள் உணர்வு ரீதியாக செயல்பட்டதாலேயே அன்று நடந்த மறியல் போராட்டம் வெடித்தது. அது வன்முறையல்ல. எந்த வன்முறைச்செயலும் இடம்பெறவில்லை. ஏற்கனவே கோவிலடியில் நடைபெற்ற கைகலப்பில் ஏற்பட்ட சிறு காயங்களைத் தவிர எமது மக்கள் எந்த வன்முறைச்செயலிலும் ஈடுபடவில்லை. கோவில் தரைமட்டமாக இடிக்கப்பட்டு, இரண்டு கடைகள் முஸ்லிம்களால் தாக்கப்பட்ட நிலையிலும் பள்ளிமுனை வாழ் கத்தோலிக்க மக்கள் கொதித்தெழுந்தாலும் அவர்கள் தங்களை வன்முறைக்கு விட்டுக் கொடுக்கவில்லை. இறுதியில் அவர்களுக்கு மனதால், மனச்சாட்சிப்படி ஏற்க முடியாத தீர்வை முன்வைத்தபோதும் மன்னார் மறைமாவட்டத்தை தலைமை ஏற்று கத்தோலிக்க மக்களை வழிநடத்தும் மன்னார் ஆயர் மேன்மை தங்கிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கட்டுப்பாடு மிகுந்தவர்களாக கலைந்து சென்றனர்.

எவ்வாறாக இருப்பினும் நாம் கிறிஸ்து கொண்டுவந்த மன்னிப்பு சமாதானத்தை இழந்துவிட முடியாது. இயேசுவின் சாட்சிகளாக வாழ உதித்த கிறிஸ்தவர்களின் மதம் வன்முறைக்கு எதிரான வாழ்க்கை முறையையே போதிக்கின்றது. இயேசுவுக்கு இழைக்கப்பட்ட வன்முறைக்கெல்லாம் இயேசு கொடுத்த பதில் உலகில் கிளைவிட்டு, விழுது தாங்கி நிலைத்திருக்கும் பரிசுத்த திருச்சபையே ஆகும்.

முழுச் சமூகமும் சமாதானத்திற்காக ஏங்கி நிற்கும் இந்தத் தருணத்தில் இந்தச் சந்தர்ப்பத்தை எந்த விசமிகளும் பயன்படுத்தாது பார்த்துக்கொள்ளும் கடமை எம்மிடம் உள்ளது. இன்நிலையில் ஒரு சமாதான நிகழ்வை ஏற்படுத்தி வன்முறைக்கு முடிவு கட்ட நாம் முயற்சிக்கலாம் அனைத்து சமய சமூக தலைவர்களும், சுயநலம், அரசியல், சமய வேறுபாடுகளைத் தாண்டி மன்னார் மக்களின் பாரம்பரிய சமாதான வாழ்வுக்கு உழைக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

# அமதிகளின் பொது அமர்வு

கடந்த செப்ரம்பர் மாதம் 13ம் திகதி தொடக்கம் 17ம் திகதிவரை யாழ் மாகாணத்தைச் சார்ந்த அனைத்து அமலமரித்தியாகிகளின் பொது அமர்வு யாழ்ப்பாணத்திலுள்ள அமதிகளின் இல்லமாகிய தொடர்பகத்தில் இடம்பெற்றது. ஐந்து நாட்கள் தொடர்ச்சியாக இடம் பெற்ற இந்த அமர்வில் யாழ் மாகாணத்தைச் சார்ந்த 80 அமலமரித்தியாகிகள் பங்கேற்றனர். அருட்பணியாளர் செல்வரெட்ணம் (கரவையூர்ச் செல்வம்) அவர்கள் இப்பொது அமர்வை நெறிப்படுத்தினார். அமதிகளின் கொழும்பு மாகாண முதல்வர் அருட்பணியாளர் ஒஸ்வோல்ட் பேத் அவர்கள் கருத்துக்களை பகிர்ந்துகொண்டார்.

அமதிகளின் தற்கால பணிகளை ஆராய்ந்து மீளாய்வு செய்வதும் காலத்தின் குறிகளுக்கேற்ப அடுத்த பத்து வருடங்களுக்குரிய பணிகளைத் திட்டமிடுவதும் இப்பொது அமர்வின் நோக்கமாகும். ஆறு வருடங்களுக்கு ஒரு முறை இப்பொது அமர்வு நடாத்தப்பட வேண்டி இருப்பினும் 1992ம் ஆண்டிற்கு பின்னர் (அதாவது பத்து வருடங்களுக்குப் பின்னர்) தற்போதுதான் இப்பொது அமர்வு இடம்பெற்றுள்ளது.

அடுத்த வருடம் உரோமாபுரியில் நடைபெறவிருக்கும் அனைத்துலக அமதிகளின் பேரமர்வுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குமுகமாக ஓர் ஆலோசனை அமர்வாகவே இந்த அமர்வு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பொது அமர்வில் அமதிகளின் இறையியல் மெய்யியல் மாணவர்களும் முழுமையாக பங்கெடுத்தனர். ஏனெனில் இவர்களே அடுத்த பத்து வருடங்களில் பணித்தளத்தில் கால் பதிக்க உள்ளனர். இந்த பொது அமர்வுக்கு ஆயத்தமாக அருட்பணியாளர் ஒஸ்வோல்ட் பேத் அவர்களின் நெறிப்படுத்தலில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் அமதிகளுக்கான தியானமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# செபமாலை தாசர் இருவருக்கு

## மன்னாரில் திருத்தொண்டர் பட்டம்

கடந்த செப்டம்பர் மாதம் 25ம் திகதி மலை 5.00 மணிக்கு செபமாலை தாசர் சபையைச் சேர்ந்த இரண்டு அருட்சகோதரர்களுக்கு திருத்தொண்டர் பட்டம் வழங்கப்பட்டது. மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் இடம்பெற்ற இத்திருநிகழ்வின்போது யோசப் உதயக் குமார் இம்மனுவேல் ஜோர்ச் ஆகிய இரண்டு அருட்சகோதரர்களே திருத்தொண்டர் பட்டம் பெற்றவர்களாவர். மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையினால் நிறைவேற்றி வைக்கப்பட்ட இத்திருச்சடங்கில் அருட்பணியாளர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள். மறைமாவட்டக் குருக்கள் கலந்து சிறப்பித்தனர்.

# தியாக்கோன்களாக மூன்று அமதிகள்

கடந்த செப்ரம்பர் மாதம் 19ம் திகதி யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் மூன்று அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்சகோதரர்களுக்கு யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகையினால் தியாக்கோன்பட்டம் வழங்கப்பட்டது. முருங்கன் பரிகாரிகண்டலைச் சேர்ந்த அருட்சகோ. ருஸ்வோல்ட் ரஞ்சித், புலோலியைச் சேர்ந்த கோட்விறி ஜோயல், தாழையடியைச் சேர்ந்த பேனாட் ஆகியோரே திருத்தொண்டர்களாக நியமிக்கப்பட்டவர்களாவர். இவர்களின் திருத்தொண்டு சிறக்க மன்னா வாழ்த்தி நிற்கின்றது.

# நியூசிலாந்து வாழ் தமிழ் மக்களின் திருவிழா

நியூசிலாந்திலுள்ள தமிழ் மக்கள் ஒன்றிணைந்து லோசானி என்ற இடத்தில் அமைந்துள்ள புனித சூசையப்பர் தேவாலயத்தில் அன்னை வேளாங்கண்ணியின் திருவிழாவை சிறப்பாகக் கொண்டாடினர். கடந்த செப்டம்பர் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.00 மணிக்கு இத்திருவிழா நடைபெற்றது. ஈழத்திருநாட்டில் தற்போது நிலவும் சமாதான சூழ்நிலை தொடர்ந்து நீடிக்கவும் நீதியுடன்கூடிய சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கவும் இங்கு வேண்டுதல் செய்யப்பட்டது. தாயகத்தில் வாழும் அனாதை ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக ஆன்மீகப் பணியகம் நடாத்திய அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பும் அன்றைய தினம் நடைபெற்றது.

# தாயகத் திருச்சபையின் ஏடுகளின் வளர்ச்சிக்காக பிரான்ஸ் தமிழ் மக்களின் உதவி

2003 தவக்கால நாட்களில் பிரான்சிலுள்ள தமிழ் கத்தோலிக்க மக்களிடமிருந்து நிதியை சேகரித்து அந்நிதியை இலங்கையில் வளர்ந்து வரும் தமிழ் கத்தோலிக்க பத்திரிகைகளின் வளர்ச்சிக்காக பிரான்சில் உள்ள இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் அனுப்பிவைத்துள்ளது. இதில் மன்னா பத்திரிகைக்காக 400 யூரோ அனுப்பப்பட்டுள்ளது. இம்முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்ட அனைவருக்கும் குறிப்பாக பிரான்சிலுள்ள இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்திற்கும் அதன் முன்னாள் இயக்குனர் அருட்பணியாளர் செபஸ்ரியன் அடிகளாருக்கும், தற்போதைய இயக்குனர் அமலதாஸ் அடிகளாருக்கும் மன்னா தனது நன்றியையும் செபத்தையும் தெரிவித்து நிற்கின்றது.

# கடவுளை நம்பாத பெற்றோரின் பிள்ளை துறவியானது

கடவுளை நம்பாத பெற்றோரின் மகள் பெயர்தான் காட்டி சைற்லர். அவள் மறைவாழ்வு பற்றியோ விசுவாசம் பற்றியோ அறிந்திருந்தது வெகு சொற்பமே. அவளுக்குச் செபம் என்றால் என்ன என்பதே தெரியாது. ஆனால் நீண்ட தூண்டுதலுக்குபின் 21 வயதில் கத்தோலிக்க மறையைத் தழுவிய அப்பெண் டொமினிக்கன் சபைத் துறவியாக வாழ்வதற்குப் பின்னணியில் வளர்ந்தவள். பின்னர், பேதுரு பாவிலு திருவிழா அன்று, புதுமைப் பதக்க ஆலயத்தில் அவள் மனம்மாறவே வாழ்க்கை தலைகீழாகத் திரும்பியது. அவளது பெற்றோருக்கு தான் கத்தோலிக்க திருமறையைத் தழுவ இருப்பதாக அறிவித்தாள். 2000ம் ஆண்டு சித்திரை உயிர்ப்புத் திருவிழிப்பு வேளை திருமறையைத் தழுவிக் கொண்டாள்.

# துறவற வாழ்வில் யூபிலி விழாக்களைக் காணும் அ.ம.தி.கள்

கடந்த செப்ரம்பர் மாதம் 13ம் திகதி பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் மூன்று அமதிகளின் துறவற யூபிலி விழாக்கள் நினைவுகூரப்பட்டன. இவர்களின் முதலாவது துறவற வார்த்தைப்பாட்டு தினம் செப்ரம்பர் 8ம் திகதியாகும். அருட்பணியாளர் பீ. எஸ் மரியதாசன் தனது துறவற வாழ்வில் 60 வருடங்களை நிறைவு செய்ததையும் அருட்பணியாளர் எஸ். ஜே. பிரான்சிஸ் தனது துறவற வாழ்வில் 50 வருடங்களை நிறைவு செய்ததையும், அருட்பணியாளர் ஜீவேந்திரா போல் (அமதிகளின் யாழ் மாகாண முதல்வர்) தனது துறவற வாழ்வில் 25 வருடங்களை நிறைவு செய்ததையும் அன்றைய நாளில் திருப்பலி ஒப்புக்கொடுத்து நினைவு கூர்ந்தனர். இவர்களுக்கு மன்னா செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத் [illegible] அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org